ரிஜிஸ்டர் நெ.—2197 | போஸ்ட் பாக்ஸ் நெ. 346. | டெலிபோன் நெ. 2583

மிஸௌரியில் பயங்கர புயல், பலத்த உயிர்சேதம்

திராவிடன்

❖ நாடோறும் வெளிவருவது ❖

திரு. எ. இராமசாமி முதலியார் கல்விசபைத் தலைவரானார்

VOl— பு—11 | ஆசிரியர்:—திரு. சனக-சங்கர கண்ணப்பர் | இதழ்—83

சென்னை பிரபவ-ஸு புரட்டாசி-மீ 15௳ — 1927-ஸு அக்டோபர்-மீ 1௳ சனிக்கிழமை

ஔவை அருந்தமிழ்

(௦)

வரகவி. திரு. அ. சுப்பிரமண்யபாரதி இயற்றியது,

சில முக்கிய அபிப்பிராயங்கள்

நவசக்தி............"இந்நூலில் ஔவையார் பாடியதாகச் சொல்லப்படும் பாடல்கள் பலவும் ஒருங்கே திரட்டப்பட்டு விரிவுரையுடனும், விசேஷ வியாக்கியானத்துடனும், தக்க மேற்கோள்களுடனும் வெளியிடப்பட்டிருக்கின்றன.........நீதிக்களஞ்சியம் என்று சொல்லப்படவேண்டிய "ஔவை அருந்தமிழ்" என்னும் இந்நூல் ஒவ்வொரு மாணவரிடத்திலும்—ஏன்? ஒவ்வொரு தமிழரிடத்திலும் இருக்க வேண்டுமென்பதை வற்புறுத்திக்கூற விரும்புகிறோம்."

தமிழகம்............'இந்நூலானது கற்றாரும், மற்றாரும் பெண்டிரும், பாலரும் பன்முறையும் பயிலத்தகுந்தது"

தனவைசிய ஊழியன்............"தெய்வப் புலமை வாய்ந்த ஔவையார் பல சந்தர்ப்பங்களில் பாடிய பாட்டுகளை இயன்றவரை தொகுத்து ஆக்கப்பட்ட இந்நூலில் ஸ்ரீமான் பாரதியவர்கள் ஒவ்வொரு பாட்டையும் எடுத்துக் கொண்டு அதனதன் கருத்துக்களை நன்றாக விளக்கியுள்ளார். மற்றும் அவரது திருப்பாடல்களின் கருத்துக்களை ஒத்த கவிகளை, திருக்குறள், நாலடி, திரிகடும், குமரேசசதகம் முதலான நூல்களிலிருந்து மேற்கோளாகக் காட்டியும் அரும்பதங்கட்கு உரை தந்தும் பாடல்களுக் கேற்றக்கதைகளை எடுத்து விளக்கியும் இந்நூலை அழகுபெற முடித்திருக்கின்றார்கள்... ......இச்சிறந்த நூலைத் தமிழ் நாட்டார் யாவரும் வாங்கிப் படித்து இன்புறுதல் வேண்டும்,"

தேச நேசன்.........."இதில் (ஔவை அருந்தமிழில்) யாவருங் கற்றுணர வேண்டிய பலநீதி மொழிகளடங்கி யிருக்கின்றன. ஆடவரும் பெண்டிருமாகிய தமிழரனைவரும் இதனைப் படிக்க வேண்டிய தவசியமாகும்."

இந்து சாதனம்........"இந்நூல் கற்குந்தோறும் களிபேருவகை பயக்கும் பான்மையது. அருந் தமிழறிந்தோரொவ்வொருவரும் இவ்வரிய நூலை வாங்கிப் படிப்பது நலமாகும்."

விலை அணா 12. தபால் கூலி வேறு.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி.
திருவல்லிக்கேணி, சென்னை.

(213)

திரு. எ. இராமசாமி முதலியார்.

(இவர் சென்னை ஜில்லாக் கல்விச் சங்கம் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.)

செந்தமிழ்ச்செல்வி

[ஐந்தாவது ஆண்டு, மாதப்பத்திரிகை]

[illegible] முதலியன சிறந்த முறையில் வெளிவருகின்றன.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4. வெளிநாடு ரூ. 4—8—0.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 2 அணா தபால்தலை அனுப்புதல் வேண்டும்.

முதல் 4 ஆண்டு பைண்டு செய்த தொகுதிகளும் தனித்தனிவிலை ரூ. 3—8—0.

மொத்தவிலை ரூ 12.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
6, பவழக்காரத்தெரு, சென்னை.

(222)

பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.)

மதராஸிலிருந்து ரெங்கூனுக்கு கப்பல் பிரயாணம்
(காலை 10 மணிக்கு)

" எதியோப்பியா" 7—10—27
" எலிங்கா 14—10—27

மதராஸிலிருந்து ஸ்ட்ரெயிட் ஸுக்கு கப்பல் பிரயாணம்
(மாலை 4 மணிக்கு)

" ரோஹ 5—10—27
" ஜூலா 19—10—27

இதர விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

பின்னி & கோ. (மதராஸ்)
லிமிடெட்.
ஏஜெண்ட்ஸ் மதராஸ்.
(195)

Why Trouble over Letter-Writing?

MASTER THE ART WITH THE HELP OF
K. M. BANERJEE'S
WIDE-WORLD
ENGLISH CORRESPONDENCE

[The Most complete and Comprehensive Guide to the Art of Letter-Writing.

Contents:—Elaborate Chapters on Practical Letter-Writing and General Introduction containing on a brief scale the rules of grammar and idiom. Besides it has a big collection of specimen letters on all subjects, Commercial and Business Correspondence. Correspondence relating to small Trades Merchant Office, Courts, Income Tax, Municipality, Family and School Correspondence and all sorts of Forms, legal and general. Invaluable also to students.

Price Rs. 1-12. V. P. Postage Extra.

AGENTS WANTED EVERYWHERE
INDUSTRY OFFICE (Book Dept.)
[illegible], SHAMBAZAR BRIDGE ROAD, CALCUTTA.

ஏழைகளுக்கு அதிர்ஷ்டம்! பணக்காரருக்கு லாபம்!

சென்னை நாஷனல் லேவ்ஸ்டாக் ரிஜிஸ்டிரேஷன் பாங்கி (லிமிட்டட்) யில் எந்தப் புருஷனாவது ஸ்திரியாவது 10 ரூபா விலையுள்ள 15 பங்குகள் எடுத்துக்கொண்டால் அவருக்கு வருடந்தோறும் லாபத்தில் ஆன் வீதப்படி பாகமும், 500 ரூபா போனஸும் கிடைக்குமென்பது திண்ணம்.

இது விஷயமாய் இன்னும் வேண்டும் விபரங்களுக்கு கீழ்கண்டவருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

எ. டி. வேலு முதலியார் கம்பெனி
சோல் ஷேர் புரோக்கர்ஸ்,
அப்புமுதலி வீதி மைலாப்பூர்.
சென்னை.

206

சுத்தககதரையே வாங்கி உடுத்துங்கள்
போலிக்கதர் வாங்கி ஏமாறுதீர்கள்.

நீங்கள் கட்டிவைத்த கோவில்களில் கடவுள் விக்கிரகங்களை அருகில் போய்பார்க்க உங்களுக்கு உரிமை கிடையாதா?

தரகர்கள் தேவை

இந்தியா, பர்மா, சிலோன் தேசங்களி லெல்லாம், பங்கு விற்பனை செய்வதற்கு உதவி தரகர்கள் தேவை. ஒருவருடகாலத்தில் 200 "பிரிபர்ட் பாண்ட" பங்குகள் விற்கக் கொடுக்கிறவர்களுக்கு மாதம் ரூ. 100 சம்பளமும் வருடந்தோறும் போனஸ் 100 ரூபாயும் கொடுக்கப்படும் (10 ரூபா விலையுள்ள 15 பங்குகள்கொண்டது ஒரு பிரிபர்ட் பாண்ட்) இது விஷயமாய் இன்னும் வேண்டிய விபரங்களுக்கு கீழ்கண்டவருக்கு எழுதித் தெரிந்துகொள்க.

எ. டி. வேலு முதலியார் கம்பனி
சோல் ஷேர் புரோக்கர்ஸ்,
நாஷனல் லேவ்ஸ்டாக் ரிஜிஸ்டிரேஷன் பாங்கி லிமிட்டெட்.
மைலாப்பூர், சென்னை.

205

ஆச்சரியமான புஸ்தகம்

தமிழில் இதுதான் முதல்புஸ்தகம்

தாய்த்து, கவசம், மந்திரங்களடங்கியது!

உண்மையான பலனளிக்கத்தக்க தாய்த்துகள் செய்ய சுலபமான வழிகள் இதில் அடங்கியிருக்கின்றன. யாராருக்கு எதெதில் ஆசையுண்டோ அதற்கெல்லாம் தாய்த்து உண்டு:செல்வத்துக்கும், அதிர்ஷ்டம், ஆரோக்கியம், சுபிட்சம், எதில் இறங்கினாலும் ஜெயம், எல்லாவித வியாதியையும் சொஸ்தம் செய்ய, துரதிர்ஷ்டத்தை விலக்க நவக்கிரஹ பீடையைப்போக்க, இடம்பம் சகம் இவைகளைப்பெற வழக்கில் ஜெயமடைய, வம்ச விருத்தியடைய, பிறரிடமிருந்து சவுகரியமடைய, பூர்ணயுளுள்ள குழந்தைகளைப் பெற முதலான பல விஷயங்களுக்கும் தாய்த்து இருக்கின்றன. மேலும் வி[illegible]

Tata Indian Science Institute,
Vizianagaram City.

167A

இரெயில்வேகால அட்டவணை

மதராஸ் ஸெண்டிரல்.

	புறப்படும் நேரம்.	வரும நேரம்.
	மாலை	காலை
கல்கத்தா மெயில்	8.0	8.0
பம்பாய் மெயில்	9.5	7.35
பெங்களூர் மெயில்	4.40	6.30
மேட்டுப்பாளையம மெயில்	7.30	7.15
மங்களூர் மெயில்	7.40	6.C
பெஜவாடா பாசஞ்சர்	8.50	10.30
ரேணுகுண்டா ,,	6 20	ப 12 0
பெங்களூர்எக்ஸ்பிரஸ்	12 45	ப 2 35
,, பாஸஞ்சர்	8.25	8 30
ஜோலார்பேட்டை பாஸஞ்சர்	12.55	2.10
அரக்கோணம் பாஸஞ்சர்	3 45	9 45
	காலை	மாலை
வால்டேர் பாஸஞ்சர்	8 30	6 0
பம்பாய் பாஸஞ்சர்	7 5	9 30
ராய்ச்சூர் ,,	8 40	4 90
பங்களூர் ,,	6 35	8.50

மதராஸ் எழும்பூர்.

	மாலை.	மாலை.
போட்மெயில	8.40	7.0
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்	10.0	6.0
திருச்சி பார்சல் ,,	11	4 0
மதுரை பாஸஞ்சர	7.30	3.0
திருச்சி பாஸஞ்சர் (மீச்சவிருந்து)	2.45	12.31
ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ்	காலை 7.20	மாலை 6.0

11-வது நாடார் மகாநாடு
கும்பகோணம்.

சகோதரர்களே!

நமது நாடார் மஹா ஜன சங்கத்திற்கு என்னை நீங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தபெருமையையான்மிகுதியும் பாராட்டுகின்றேன். அதற்காக என்மனபூர்வமான வந்தனத்தையளிக்கிறேன். என் அறிவு, அனுபோகம், வயது முதலியவற்றைக் குறித்து இப்பெருமை எனக்கு அளிக்கப்படவில்லையென்பதையும், என் குடும்பத்தைக் கவுரவப்படுத்த உத்தேசித்து மட்டும் இப்பதவி எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறதென்பதையும் நான் நன்கு உணர்வேன். நீங்கள் இப்போது என்மேல் சுமத்தியிருக்கும் பொறுப்பு மிகுந்த பதவியை வகிக்கத்தக்க சக்தி எனக்கு இல்லாதிருப்பதை யானறிந்தும் இச்சமயம் நமக்கும் நமது வகுப்பிற்கும் சம்பந்தமான சில வார்த்தைகளை உங்கள் அனுமதியின்பேரில் நான் பேசவிரும்புகிறேன்.

இக்கூட்டத்திற்கு நமது வகுப்பினர்கள் பல இடங்களிலிருந்தும் ஏராளமாய் வந்து கூடியிருப்பதைக்கண்டு நான் ஆனந்தமடைகிறேன். ஏனெனில் உங்கள் மூலமாக இக்கூட்டத்தின் தீர்மானங்களும் முடிவுகளும், நமது வகுப்பினருக்குப் பரவும். இன்னும் உங்களில் அநேகருக்குத் தத்தம் இடங்களில் இருக்கும் குறைபாடுகளும் வேண்டிய சீர்திருத்தங்களும் செவ்வையாய்த் தெரியுமாதலின் நீங்கள் இக்கூட்டத்தில் நடக்கவேண்டிய வேலைக்குத் தக்க உதவி புரியக்கூடும். நம் தற்கால நிலையை அறிந்து மேன்மேலும் நாம் முன்னேற்றமடைவதற்கான உபாயங்களை யோசித்து ஆராயும் பொருட்டு நாம் இங்குக்கூடியிருக்கிறோம். இந்நோக்கம் முற்றிலும்பூர்த்தியடைய வேண்டுமாயின் முந்திய கூட்டத்தில் கூறியபடி நாம் பல இடங்களிலும் கிளைச் சங்கங்கள் ஸ்தாபித்து அவைகளை நமது வாலிபர்களைக் கொண்டு ஒழுங்குபடுத்தி நடத்துமாறு ஏற்பாடு செய்தல் வேண்டும். இவ்வாறு [illegible] பரவுவதால் நாய்ச்சண்டை அவைகள் பங்கிடப் பட்டுப் போவதன்றி, எளிதாய் நடைபெறும். நமக்கும் வருடந்தோறும் கூட்டம் கூட்டுவது சுலபமாகும். இவ்வித நோக்கங்களோடு தான் நம் நாட்டில் எங்கும் காங்கிரஸ் மகா சபைகளும், பிராமணரல்லாதார் கிளைச்சங்கங்களும், வாலிப கிறிஸ்தவர் சங்கங்களும் பிரம்மஞான சபைக் கிளைகளும் அமைக்கப்பட்டுள்ளன. தவிரவும் நமது மஹாஜனக் கூட்டம் கூடும் பொழுது ஒரு பொருட் காட்சியும் அத்துடன் ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று முந்திய கூட்டத்தில் கூறப்பட்டுள்ளதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன். இதன் அவசியத்தைக்குறித்தே நானும் அதை இங்கு எடுத்துரைக்கின்றேன். தற்காலத்தில் அநேகமாய் இவ்விதக் கூட்டங்கள் கூடுந்தோறும் ஒரு பொருட் காட்சியுமேற்பாடு செய்கிறார்கள். இவ்விதப்பொருட்காட்சிகள் தேசிய காங்கிரஸ் கூடும் போது நடத்துகிறார்கள். நமது ராஜதானியில் அநேக தாலூகா போர்டாரும் முனிசிபாலிடியாரும் விவசாய கைத்தொழில் இலாகாவினரும் அடிக்கடி பொருட்காட்சி ஏற்பாடு செய்வதை நாம் அறிவோம். இவைகளுக்குப்பல இடங்களினின்றும் நேர்த்தியானதும், திறமையை விளங்குவதுமான பல பொருள்கள் வந்து சேருவதால் இவைகளால் நமக்கு உபயோகமான பல விஷயங்கள் புலப்படுவதன்றி மனதிற்கும் சந்தோஷம் அதிகரிக்கின்றது.

இனி நான்கூற உத்தேசித்திருக்கும் விஷயங்களில் முதலாவதாகக் கல்வியைப்பற்றி கூறுகிறேன்.

கல்வி நிலையும் — செய்ய வேண்டிய மாறுபாடுகளும்.

தற்காலத்தில் அனுஷ்டானத்திலிருந்து வரும் கல்வி முறைகளைப்பற்றியும் அவைகளின் குறைகளையும், ஏற்படவேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றியும் விரிவாக எடுத்துக்கூற எனக்குப் போதுமான அவகாசமில்லை. ஆகினும் நம்சம்பந்தமான சில விஷயங்களை மட்டும் எடுத்துக் கூறுகின்றேன். நமது மாணவர்கள் பயின்றுவரும் கல்வி முறைகளில் சிற்சில மாறுபாடுகள் மிகவும் தேவை. அவர்கள் கற்கும் கல்வி பின்காலத்தில் அவர்களுக்கு வாழ்நாளில் பயனளிப்பதாயும், அனுஷ்டானத்தி லிருப்பதாயு மிருத்தல் வேண்டும். இந்நோக்கங்கள் பெரும்பாலும் நமது கல்விச்சாலைகளில் பயிற்றுவிக்கும் "பொதுக்கல்வி" (General Education) யால் நிறைவேறுவதில்லையென்பதை அறிந்தே அடிக்கடி பத்திரிகைகளின் வாயிலாகவும், கட்டுரைகளின் மூலமாகவும் நம் நாட்டில் அநேகர் இதை இகழ்ந்து கூறியுள்ளனர். எவ்வித மாறுபாடுகள் ஏற்பட்டால் நமது கல்விச்சாலைகளால் நம் மாணவர்களுக்குத் தற்காலத்திற்கு வேண்டிய விஷயங்கள் பயிற்றுவிக்கப் படலாமென நாம் கவனிப்போம்.

பொதுவாகப், பொதுக்கல்விக்குச் செலுத்தப்படும் கவனத்தைச் சற்றுக் குறைத்து அதைத் தொழிற் கல்விக்குச் செலுத்தவேண்டும். நமது கலாசாலைகளில் கீழ்த்தர வகுப்புகளில் தொழிற்கல்வி சம்பந்தமாக ஆரம்பப் பயிற்சி அளிக்கப்பட்டு மேல்தர வகுப்புகளில் இன்னும் சற்று முதிர்ந்த பயிற்சி அளிக்கப்படலாம். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நம் மத்தியதரக் கலாசாலைகளிலும் ஆரம்பக் கலாசாலைகளிலும் தொழிற்பயிற்சி வகுப்புகள் சேர்க்கப்பட வேண்டுமென்று நினைக்கிறேன். இப்பரீட்சையை நாம் வைத்து நடத்தும் 3 மத்தியதரக்கல்லூரிகளில் ஏற்படுத்திப் பார்க்கலாமென்று தோன்றுகிறது.

இது தவிர விவசாயக்கல்வி, வியாபாரக் கல்வி, தொழிற் கல்வி முதலியவைகளிற் பயிற்சி அளிப்பதற்கென்றே தனிக்கல்விச்சாலைகள் நமது நமது ஜனங்கள் வசிக்குமிடமெங்கும் பரவவேண்டுமென்பது என் நோக்கம். இதில் பயிலும் நமது மாணவர்கள் தம் வாழ்நாளில் தேர்ந்த தொழிலாளர்களாகவும், வியாபாரிகளாவும், விவசாயிகளாகவும் அமரவேண்டுவது பொருட்டு இக்கல்விச்சாலைகள் ஏற்படவேண்டுவது அவசியம். சர்க்காரால் சிற்சில இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இன்ஜினிரிங் கல்லூரி, கலாசாலைகளும் விவசாயக் கல்லூரியும், தொழிற் கல்விச்சாலைகளும் உள்ளன. ஆனால் அவைகளிற்பயின்று தேர்ச்சி பெறுவதற்குச்சேர்க்கப்படும் மாணவர்கள்படிப்பதிகம்உள்ளவர்களாயிருத்தல் வேண்டும். அன்றியும் இவைகளிற் கல்விகற்பவர்களுக்கு ஏற்படும் பொருட்செலவும் அதிகம். ஆகவே இதுபோன்ற பல சிறிய பள்ளிக்கூடங்கள் நாமே எங்கும் ஏற்படுத்தவேண்டியது முக்கியம். சுதேச ராஜ்யங்களில் முதன்மையான பரோடா இராஜ்யத்தில் விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் வேண்டிய கல்விபயிற்றுவிக்கும் அநேக கலாசாலைகள் நாடெங்கும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இவ்விதத் தொழிற்கல்வி நம் மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று கூறுவதினின்றும பொதுக் கல்வியே வேண்டுவதில்லை யென்று நான் அபிப்பிராயப்படுவதாகக் கொள்ளலாகாது. ஒரு தொழிலுக்கு வேண்டிய கல்வி பயிலுபவர்களுக்கும் சரி, மேலே படிப்பவர்களுக்கும் சரி, ஆரம்ப மூலாதாரக் கல்வி மிகவும் அவசியம். ஆரம்பக்கல்விகற்று எண்ண எழுதப்படிக்கத்தெரியாத ஒருவனும் தேர்ந்த தொழிலாளியாவது முடியாது. எவ்வளவுக்கெவ்வளவு தேர்ச்சியும் வன்மையும் ஏற்பட வேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு பொதுக்கல்வியும் திடமாயிருத்தல் வேண்டும்.

போன கூட்டத்தில் நமது உயர்தரக் கல்விச்சாலைகளை நாம் அதிகப்படுத்த வேணடுமென்றும், இவைகளை ஒட்டி மேலேவரும் பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு கல்லூரி ஒன்று நாம் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. ஆயினும் நான் மாறாக அபிப்பிராயம் கொள்ளுகிறேன். இதற்கு மிகுதியான திரவியம் வேண்டும். இத்திரவியத்தைக்கொண்டு சிலர் பொருட்டு நாம் ஒரு கல்லூரி ஸ்தாபிப்பதைக் காட்டிலும் நமது முன்னேற்றத்திற்கான தொழிற் கல்விச்சாலைகள் நாம் ஸ்தாபிக்கலாம். ராஜதானியின் பல இடங்களிலும் இருக்கும் கல்லூரிகளில் நமது மாணவர்கள் சேர்ந்து படிக்கலாமல்லவா? அன்றியும் அதிகமான கல்விச்சாலைகளை ஸ்தாபிக்குமுயலுவதிலும் இருக்கும் கல்விச் சாலைகளை நாம் முன்னேற்றத்திற்குக் கொண்டுவந்து விருத்தி செய்வது மேலாகும். கடைசியாக ஒரு அறிவாளி கூறியுள்ளபடி நாம் நமது கல்விமுறையினால் அதில் பயிலும் மாணவர்களுக்குப் பல ஜீவனோபாயங்கள் ஏற்படும் விதம் அதை அமைக்க வேண்டுமாகையால் மேற் கூறிய ஏற்பாடுகளை நான் எடுத்துக்கூறலானேன்.

தொழிற்பயிற்சி—அதற்கான ஏற்பாடுகள்

நம் கல்வி முறைகளையும் நாம் அனுஷ்டிக்க வேண்டிய சில மாறுபாடுகளையும் நான் கூறுகையில் நமது பிள்ளைகளுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்று நான் எடுத்துக் காட்டினேன். அது விஷயத்தைப் பற்றி இங்கு சில வார்த்தைகள் கூற நினைக்கிறேன்.

பொதுவாக நம்மனதில் ஒரு எண்ணம் இருந்து வருகின்றது. நம்குடும்பத்தில் யாரை நாம் ஒன்றுக்கும் உதவாதவர்களென்று நினைக்கின்றோமோ அவர்களையே தொழிற்பயிற்சி பெறுவதற்கு அனுப்ப வேண்டுமென்றும், புத்திக்கூர்மையும் சுறுசுறுப்பும், சுட்சுமமுமான பிள்ளை "மேற்படிப்"பிற்கு அனுப்ப வேண்டுமென்றும் நம்மில் அநேகர் எண்ணுகின்றோம். இதை நாம் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். தொழிற்பயிற்சி பெற்ற அதிதீவிரமான புத்தியுக்திகளிற் சிறந்து சாமார்த்தியம் அடையும் பிள்ளைகள் நமது புத்திசாலிப்பிள்ளைகளேயாகையால் அவர்களையும் நாம் தொழிற் பயிற்சிக்கு அனுப்பவேண்டும்.

இனி இத்தொழிற் பயிற்சி அளித்தற் பொருட்டு அநேக பள்ளிக்கூடங்களும், தொழிற் சாலைகளும் வேலைகற்கு மிடங்களும் ஸ்தாபிக்கப்படல் முக்கியமாதலின் இவைகளுக்குவேண்டிய திரவியத்தை நாம் சேகரிப்பது நம் கடமையாகும். அரசாங்கத்தாரை நாம் கேட்போமாகில் தங்களாலியன்றதை உதவி புரிவார்களெனினும் அத்தகைய உதவி மிகவும் சொற்பமாகவே இருக்குமாதலின் அதனை முற்றிலும் நம்பியிருத்தலாகாது. நம்மால்இயன்ற அளவு முயற்சிகள் செய்து காம்பிசேர்த்து இவ்வேற்பாடுகள் முடிவு பெறச் செய்யவேண்டும். இதன்பிறகு வெளிதேசங்களிலேயோ அல்லது நம் தேசத்திலேயோ முக்கிய தொழில்களில் அதிகத் தேர்ச்சி பெறும் பொருட்டுக் கல்விபயிலச் செல்லும் நமது மாணவர்களுக்குச் சகாயம் புரிதற்காக ஒரு நிதி ஏற்படுத்த வேண்டும் அரசாங்கத்தார் சிற்சிலதொழிற் பயிற்சிக்காக வென்று நிதியும் உபகாரச்சம்பளமும் வழங்குகின்றனர் ஆனால் அவைகள்சொற்பமாதலின்நம்மவர்களில் அநேகருக்கு அவை பயன்படாது. வங்காளத்தில் அமைத்திருப்பதுபோல வியாபாரத் தொழிற் கல்விபயில்வோர்க்கு உபகாரம் செய்வதற்கென நாமும் ஒரு சங்கம் ஏற்படுத்தி அதனிடம் பொருள் கொடுத்து ஒரு கமிட்டியும் ஏற்படுத்தி இவ்வுதவியை வழங்கலாம். இவ்வேற்பாடுகள் முற்றுப்பெறுமுன் நம்முடைய மாணவர்களைத் தொழில் பயிற்சி பெறுவதை முன்னிட்டு அன்னியர் நடத்தி வரும் தொழிற்சாலைகளுக்கும், ஆலைகளுக்கும் அனுப்பலாம். பம்பாயில் இவ்விதத் தொழிற்கல்வி பெரும்பான்மையான மாணவர்களுக்கு அளிக்கப்படுவதால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் மிகவும் தேர்ந்ததொழிலாளர்களாகி நாட்டின் பொருளாதார நிலையை விருத்திசெய்கின்றனர். நம் மாணவர்களும் இதேமாதிரி பயிற்சி பெற்றபின் நமது நாட்டில் அநேக புதிய கைத்தொழில்களை ஸ்தாபிக்க ஏதுவாயிருக்கும்.

நாடார் மகாஜன சங்கத்தின் தலைவர்
திரு. வே. கனகசபை நாடார்
நிகழ்த்திய சொற்பொழிவு

நமது கைத்தொழில்கள்
தற்காலநிலையும், மாறுபாடுகளும்.

நாம் எத்தனவே செய்துவரும் கைத்தொழில்களை விருத்திச்செய்வதற்காகவோ அல்லது புதிய கைத்தொழில்கள் ஸ்தாபித்து நடத்துவதற்காகவோ வேண்டியமுயற்சிகள் நாம் அதிகம் செய்திருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆகவே இவ்விஷயங்களைப்பற்றி நான் சற்று விரிவாகக் கூறுகிறேன்.

நம்மில் பெரும்பான்மையோர் தென்னந்தோட்டப் பனைவெல்லம் காய்ச்சுவதிலும் பனங்கற்கண்டு காய்ச்சுவதிலும் அமர்ந்துள்ளனர் ஆயினும் இதில் நமக்குக் கிடைக்கக் கூடிய அளவு லாபம் கிடைக்கவில்லை என்பதே அநேகர் அபிப்பிராயம். அன்றி இவைகளின் தரமும் விருத்தியடைய வேண்டும். இதற்கேன ஏவை யென்று நோக்குவோம்.

அநேக இடங்களில் நாம் காய்ச்சும் பனைவெல்லத்தை அன்னிய நாட்டு வியாபாரிகள் முன்னாடியே பொருள் கொடுத்து மொத்தமாக ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறார்களென்று நான் கேள்விப்படுகிறேன். இதனால் விளையும் தீமைகள் அநேகம் உள்ளன. முன்னாடியே பொருள் கொடுக்கும் அன்னிய நாட்டு வியாபாரிகள் தங்களுக்கு லாபகரமாகவே ஒப்பந்தம் செய்து கொள்ளுகின்றார்களாதலின் நம் வகுப்பினருக்கு அது நஷ்டமாகவே முடிகின்றது. அன்னியர்கள் பொருளுதவியைத்தடுத்து அதனால் விளையும் நஷ்டத்தைத்தடுக்க உபாயங்கள் நான் பின்னால் கூறுகிறேன்.

இற்க நமது வெல்லத்தின் தரத்தை விருத்திசெய்வதற்கு வேண்டிய உபாயங்களை நாம் கவனித்து அதற்கான புதியமுறைகளை அனுஷ்டிக்கவேண்டும். முக்கியமாய் சாற்றைக் காய்ச்சுவதிலும், வெல்லத்தைச் சுத்திசெய்வதிலும்புதியமுறைகள் அவசியம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். இவைகளில் நம்மாணவர்களையும் பயிற்றுவிக்க வேண்டுவது அவசியம்.

பனைவெல்லம் காய்ச்சுவதோடு நாம் கரும்பாலைகளை ஏற்படுத்திச் சர்க்கரையும் காய்ச்சலாமென்று எனக்குத் தோன்றுகின்றது. நம் வகுப்பினர்வசிக்குமிடங்களில் கரும்பு விளைவதில்லையென்றும் அதனால் இக்கைத்தொழில் விருத்தியாகாவென்றும் நீங்கள் அபிப்பிராயப்படலாம். அதுசரியல்ல கரும்பு விளையு மிடங்களுக்கு நாம்சென்று நமது பொருளைக்கொண்டு ஆலைகள் ஸ்தாபித்து இக்கைத்தொழில் விருத்தி செய்யலாம். ஆலைப்பயிற்சியும்சர்க்கரையைக் காய்ச்சுவதிலும் சுத்தி செய்வதிலும் தேவையான பயிற்சியும் நமது இளைஞர்களுக்குக் கொடுத்து நாம்வெகு நாட்களாக நடத்திவரும் ஒரே கைத்தொழிலில் நாம் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் இத்துடன் புதிய கைத்தொழில்கள் ஆரம்பித்து விருத்திசெய்வது நலமல்லவா? நாமே இவைகளை ஆரம்பிக்காவிடினும் ஆரம்பம் செய்பவர்களுக்குத் தக்க உதவி புரியலாமல்லவா? இவ்வாறு புதிய கைத்தொழில்கள் ஏற்படின் அதால் தொழிலில் நமது வாலிபர்கள் சேர்ந்து தேர்ச்சியடைவார்கள். அன்றியும் நமது பொருளாதாரநிலையும் விருத்தியாகும். சென்னையில் நடத்தப்பட்டுவரும் பென்சல், நெருப்புக்குச்சிக் கைத்தொழிலும், ராஜதானியின் பலஇடங்களிலும் இவ்வூரிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நெசவு சாலைகளும், சேலத்தில் உள்ள மெழுகுவர்த்தித் தொழிற்சாலைகளும், பெஜவாடா முதலிய இடங்களில் ஏற்பட்டிருக்கும் பின்னல் சாலைகளும் (Knitting) சில காலமாகவே ஆரம்பித்து நடைபெறுகின்றன. நாமும் இவ்விதமே புதிய சிறிய கைத்தொழில்களை எங்கும் ஸ்தாபிக்க வேண்டும். இதற்கு ஏராளமான முதலாவது, பெரிய கட்டிடங்களாவது ஆரம்பத்தில் தேவை யென்று நினைக்க வேண்டாம். தேர்ச்சி பெற்ற சில தொழிலாளர்களைக் கொண்டும், சொற்ப முதலைக்கொண்டும், சிறிய கட்டிடங்களிலே புதிய கைத்தொழில்களை நாம் ஏற்பாடு செய்யலாம். இவ்வாறு ஜப்பான் தேசத்தில் ஜனங்கள் ஏராளமான சிறிய கைத்தொழில்கள் நடத்தி வருவதால்அங்கு செய்து முடித்து வியாபாரத்திற்கு ஏற்றுமதியாகாத பொருள்கள்ஒன்றும் இல்லை. யுத்தகாலத்தில் நமக்கு வேண்டிய பொருள்கள் யாவும் இத்தேசத்திலிருந்து செய்தனுப்பப்படவில்லையா?

இனி கைத்தொழில்களுக்கு வேண்டிய சொற்ப முதலும் எப்படிச்

(இதன் தொடர்ச்சி 11-ம்பக்கம்பார்க்க)

வெளிநாட்டுச் செய்தி.

பிரான்சுசிறையில் கலகம்

கைதிகள்டலைந்த "சத்தியாக்கிரகம்"

டோலன் செப் 30

கெட்ட உணவு கொடுக்கப்பட்டதை ஆட்சேபித்து இக்குள்ள சிறைச்சாலையில் கலகம் நேரிட்டது. பத்துபன்னிரண்டு கைதிகள் அலவாக்கு முதலிய ஆயுதங்களினால் சிறைச்சாலையின் ஜன்னல்களையும் கதவுகளையும் உடைத்து சுமார் நூறு கைதிகளை விடுதலை செய்துகொண்டு எல்லாரும்கூடி சிறைச்சாலையில் பலசாமான்களை அழித்து கோஷ்டம் செய்தனர். பிறகு கடற்படையாளரும் ஆயுதபாணி களான போலிசாரும் வந்து அந்தக் கைதிகளையெல்லாம் நவ்வொருவராய் பிடித்து மால்போக்சட் சிறைச் சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மினா ஐரியில் பெரும்புயல்

பயங்கரசேதம்

சென்ட்லூயிஸ் செப் 30

இக்கு திடீரென்று பலத்த புயல் காற்று தோன்றி மணிக்கு சுமார் 90 மைல் வேகத்தில் அடித்தது வீட்டுக் கூரைகள் காற்றில் பறந்தன, சுவர்கள் இடிந்து விழுந்து விட்டன. ஆயிரக் கணக்கான மரங்கள் வேரோடு பிடுங்குண்டு சாய்ந்தன. பல இடங்களில் கால் நடையாய்ப் போனஜனங்கள் ஆகாயத்தில் தூக்கி எறியப்பட்டார்கள்.

பலவித பழங்கள் உறபத்தி செய்யப்படும் ருடி என்ற கிராமம் அழிக்கப் பட்டுப் போயிற்று. சென்ட்லூயிஸ் பட்டணத்தில் சுமார் 70 பேர் இறந்து போனதாகத் தெரிகிறது. ...து காப்பு வேலைகளுக்காக பட்டாளங்கள் அழைக்கப் பட்டிருக்கின்றன; ...ஷனல் கார்ட் பட்டாளத்தார் புயலால் வீடு வாசலின்றி தவிக்கிற ...00 ஜனங்களுக்கு கொட்டகைகள் ...ாட்டு கொடுத்தார்கள். சென்ட் ...யிஸ் பட்டணத்தின் மேற்குபாகம் ...ழிபட்டு போயிற்று. 2500 வீடுகள் சேதமடைந்தன. டிராம்வே கம்பிகளெல்லாம் அறுந்து கிடக்கின்றன. அழகிய வீடுகள் நின்ற இடங்களில் மெல்லாம் இப்போது கூரையில்லாதமொட்டைச் சுவர்கள் தான காணப்படுகின்றன. மோட்டார் வண்டிகள் வளைந்து குலைந்தாய் வீழ்ந்து கிடக்கின்றன. ...வர்கள் விழுந்ததில் இரண்டு போலிசார் மடிந்தனர்.

மெக்சிகோவில் மத கலகம்,

கத்தோலிக் பாதிரிக்கு மரணதண்டனை

மெக்ஸிகோ செப் 28

மெக்ஸிகோ ஜலிஸ்கோ மாகாணத்தில் கத்தோலிக்கர் துருப்புகளை எதிர்த்து லாஸ் மெஸ்குயிட், போர்டியல்லா என்னுமிடங்களில் சண்டை செய்தனர். முதலிடத்தில் 15 கலகக்காரர் கொல்லப்பட்டனர் கலகத்தலைவனும் ...சேட்டுே பாதிரியும் வேறொருவரும் பிடிபட்டு மரண தண்டனை யடைந்தனர். போர்ட்டியல்லோ என்னுமிடத்தில் சர்க்கார் துருப்புகளை எதிர்த்த 250 கலகக்காரரில் 18 கொல்லப்பட்டனர் மற்றனேகர் காயப்பட்டனர். மற்றவர்கள் மலைக்கு ஓடிப்போய்விட்டனர்.

லண்டன் மாயக்கொலை

மாஜிபோர்வீரன் விடுதலை

லண்டன் செப் 29—

...லிஸ்காரன் கட்டரிட்ஜை ...லை செய்த தாகக்கூறி போலிஸார் ...ம் சிறையடைந்த பால்வேிங் கதையை ...ம்பாமல் போலிசார் அவனை விடுதலை செய்து விட்டார்கள். மோட்டார் வண்டி தப்பை ஆராய்ச்சி செய்து வேறு மூன்று மனிதர்மேல் சம்சயித்து அவர்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

விமானத்தினல் தேச ஆராய்ச்சி

ஜாம்பேஸி நதி சர்வே.

சர்பி செப் 29—

ஜாம்பேஸி நதி தீரத்தை ஆகாயத்திலிருந்து பட மெடுப்பதற்காக ரொடேஷியா சர்க்கார் ஒரு விமானக் கம்பனியாருடன் உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். லிவிங்ஸ்டோன் என்னுமிடத்திலிருந்து ஆற்றுப்பக்கமாய் நூறுமைல் தூரம் படம் எடுக்கவேண்டுமாம். 10,000 அடி உயரத்தில் பறக்கிற ஒருவிமானத்திலிருந்துபடம் எடுக்கப்படுமென்று சொல்லப்படுகிறது.

மோட்டார்போட்டி.

நியுயார்க் செப் 29

திரு. ஹென்றிபோர்டு புதுமாதிரி மோட்டார் வண்டி செய்கிறதாய் சொன்னதுமுதல் போர்ட் கம்பெனிக்கும் ஜெனரல் மோட்டார் கார்ப்போரேஷனுக்கும் பெரிய போட்டி ஏற்படுமென்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் ஜெனரல் மோட்டர் கார்ப்போரேஷன் தலைவரான திரு ஆலபிரிட்கிலோப், மில் போர்ட் என்னுமிடத்தில் பேசுகையில் இரண்டு கம்பெனிக் காரரும் விலைக்குத் தக்கதாக மோட்டார் வண்டி செய்து விற்பதற்கு வியாபாரம் இடம் கொடுக்குமென்று கூறியிருக்கிறார். இது சமாதான அறிகுறியாகக் கருதப்படுகிறது. திரு போர்டு செய்யும் புதுமாதிரி மோட்டார் வண்டிகள் ஜெனரல் மோட்டார் கார்ப்பரேஷன் செய்யும் செவ்ரலட் வண்டி போன்ற உயர்ந்த விலையுள்ள வண்டிகளுக்கு எதிரியாய்வராமலிருக்கும் வரையில் இவ்விரு கம்பனிகளுக்கும் போட்டி ஏற்படாதென்று பத்திரிகைகள் அபிப்பிராயப்படுகின்றன.

சாக்கோ வான்ஜட்டி கொலை

இத்தாலிக்கு அவர்கள் சாம்பல்

நியுயார்க், செப் 29—

மரண தண்டனையடைந்த வான்ஜட்டியின் சகோதரி திருமதி வான்ஜட்டி, சாக்கோ வான்ஜட்டி இருவரின்உடற்சாம்பலில் அரைப்பாகத்தை எடுத்துக்கொண்டு இத்தாலிக்கு கப்பலேறிவிட்டார்.

ஜெர்மன் விமானி

விமானச் சேதம்

பாக்டாட், செப், 30.

திரு. கோயன்னக் இன்று காலை இங்கிலிருந்து புறப்பட்டு பறக்க எத்தனிக்கையில் விமானம் தரையில் வீழ்ந்து சேதமடைந்தது. விமானிகளிருவரும் சேதமின்றி தப்பினர்.

கிரீஸில் சதியாலோசனை

உத்தியோகஸ்தர் பலர் கைது செய்யப்பட்டனர்

ஏதன்ஸ் செப் 30

ராஜீயத் தலைவர்களைக் கொலை செய்வதற்காக பன்கலோஸ் கட்சியார் சதியாலோசனை நடத்தினதாக சர்க்கார் விசாரணை செய்ததின் பலனாக மாஜி உள்நாட்டு மந்திரி ஜெனரல் பிசிடோனஸ், பங்கலோஸின் மகன் முதலிய பல உயர்ந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பங்கலோஸின் மனைவியை கைது செய்யவும் வாரன்ட் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் இருக்குமிடம் தெரியவில்லை.

லண்டன் கேப்டவுன் பிரயாணம்.

பிரிட்டிஷ் விமானி சமர்த்து.

ரக்பி, செப், 29

லண்டனிலிருந்து தனிமையாக விமானமேறிபுறப்பட்ட லெப்டினன்ட் பென்ட்லி என்ற பிரிட்டிஷ் விமானி 8000மைல் தூரத்திலுள்ள கேப்டவுன் போய்ச் சேர்ந்தார். இதுதான் தனிமையில் வெகுதூரம் செய்யப்பட்ட விமானப் பிரயாணம்.

கேப்டவுனுக்கருகில் 70 மைல்வேகத்தில் அடித்த புயலில் அவர் விமானத்தைச் செலுத்திக்கொண்டு போயிருக்கிறார்.

பொதுவுடமைக் கட்சி,

பிரிட்டனில் அருகிவருகிறது.

ரக்பி, செ. 30

பிரிட்டனிலுள்ள பொதுவுடமை கட்சியாரின் தொகை சென்ற வருடத்தில்மூன்றில் ஒரு பாகம்குறைந்துவிட்டது. சென்ற வருடத்திக்கு முந்தின வருடத்தில் 11,000 பொது வுடமைக் கட்சிக்காரர் இருந்திருக்கிறார்கள். ஆனல் இப்போது மத்திய பொதுவுடமைக்கட்சிக் கமிட்டியார் தயாரித்துக் கொண்டிருக்கிற அறிக்கைப்படி இந்த வருடம் 7.377 பேர் மாத்திரம் இருப்பதாகத் தெரிகிறது.

டான்ஜீர் பிரசினை

பிரிட்டிஷ் ஸ்பானிய சம்பாஷணை

பாரிஸ் செப் 29

இன்று சர் ஆஸ்டன் சாம்பர்லெய்னுக்கும் ஸ்பானிய சர்வாதிகாரி பிரமோடி ரிவேராவுக்கும் ஏதோர் ஓர் முக்கியவிஷயத்தைபற்றி சம்பாஷணை நடந்தது. என்ன பேசிக்கொண்டார்கள் என்பதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. டான்ஜீர் பிரதேசத்தை ஸ்பானியமொராக்கோவுடன் சேர்த்துவிடவேண்டுமென்பதைப்பற்றித்தான் இந்த சம்பாஷணை நடந்திருக்கலாமென்று "விஜர்னல்" பத்திரிகையின் மாட்ரிட் நிருபர் கூறுகிறார்.

பிரிட்டிஷ் யுத்த காரியதரிசி

இந்தியா விஜயம்

லண்டன் செப், 29

பிரிட்டிஷ் யுத்த காரியதரிசியான சர் லாயிங் வோர்திங்டன் எவான்ஸ் கால்செஸ்டரில் நடந்த கான்சர்வேட்டிவ்கட்சி கூட்டத்தில் பேசுகையில் நான் இன்னும் இரண்டு வாரத்துக்குள் இந்தியாவுக்கு செல்லுவேன் பிரிட்டிஷ் ராணுவத்தில் மூன்றில் ஓர் பாகம் இந்தியாவிலிருக்கிறது. ஆனல் நான் அவைகளை உத்தியோக முறையில் பார்வையிடப் போகிறதில்லை இந்திய வடமேற்கு எல்லைப்புறத்திலிருக்கிற சேனைகளைமாத்திரம் பார்வையிடுவேன்ஏனெனில் எல்லைப்புறதொல்லைகளைப்பற்றி திட்டமாய் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இந்தியச் சேனைகளும் பிரிட்டிஷ் சேனைகளும் எப்போதுமே ஒத்துழைத்து வந்திருக்கின்றன. அந்த ஒற்றுமை தழைக்கவேண்டுமென்று விரும்புகிறேன் என்று கூறினார்.

பண்டித மோதிலால் நேரு

ஜினிவா, செப் 25—

பண்டித மோட்டிலால் நேருவும் அவர் குடும்பத்தாரும் தற்சமயம் ஸ்விட்ஜர்லாந்தில் மான்டாறு என்னும் ஆரோக்கிய ஸ்தலத்திலிருக்கிறார்கள சர்வதேச சங்கம் அசம்பிளிக் கூட்டத்தைப் பார்க்கும்படி பண்டித மோட்டிலால் ஜினிவாவுக்கு சென்றுஇந்திய தூதர் கூட்டத்திலிருந்த அவருடைய சினேகிதருடன் தாமதித்திருந்தார். சமீபத்தில் லண்டன் செல்லுவார்.

நார்வேயும் இங்கிலாந்தும்

டெலிபோன் ஸ்தாபனம்

ரக்பி, செப். 29—

இங்கிலாந்துக்கும் நார்வேக்கும் டெலிபோன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த சனிக்கிழமை அது திறக்கப்படும். முதலில் லண்டனுக்கும் ஆஸ்லோவுக்கும் தான் சம்பாஷணை நடத்த இடம் கொடுக்கப்படும். காலை 8-மணியிலிருந்து மாலை 9 மணி வரையில் லண்டனிலிருந்து ஆஸ்லோவுக்கு மூன்று நிமிஷ சம்பாஷணைக்கு 22ஷில்லிங், 6பென்ஸும், இரவு 9-மணியிலிருந்துகாலை 8-மணி வரையில் 13ஷில்லிங் 6 பென்ஸும் சார்ஜ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது,

சாம்பர்லேன் - ரிவேரா சம்பாஷணை

ஸ்பானிய சர்க்கார் மறுப்பு

பாரிஸ் செப் 30.

சர் ஆஸ்டன் சாம்பர்லெய்ன் தமது "யாச்" கப்பலில் பார்விலோனுவுக்கு சென்ற விடத்தில் ஸ்பானிய சர்வாதிகாரி பிரிமோ டி ரெவராவைச் சந்தித்து டான்ஜீர் விஷயமாக ஏதேதோ பேசி முடிவுசெய்ததாக பிரஸ்தாப மேற்பட்டிருந்தது. இப்போது ஸ்பானிய சர்க்கார் வெளியிட்டிருக்கிற ஒரு அறிக்கை டான்ஜீயர் விஷயமாய் பேச்சு நடந்ததென்று அயல்நாட்டுப்பத்திரிகைகள் பிரஸ்தாபித்த தெல்லாம் பொய்யென்றும், பிரிட்டிஷ் அயல்தேசமந்திரி ஸ்பானிய துறைமுகத்துக்குவந்ததை முன்னிட்டு பிரிமோ டி ரெவரா உபசாரமாக அவரைப் போய்கண்டுபேசியதே தவிர வேறில்லை என்றும் கூறுகிறது.

பிரிட்டிஷ் கடற்படை

லண்டன் செப் 30—

கால நிலைபுயலும் காற்று மாயிருப்பதால் பிரிட்டிஷ் கடற்படை அட்லான்டிக் சமுத்திரத்தில் போய் படைப்பயிற்சி நடத்த வேண்டுமென்றிருந்த ஏற்பாடு நிறுத்தப்பட்டு விட்டது. இப்போது ஸ்காட்லந்து தேச கரையோரமாய் பிரிட்டிஷ் கடற்படை பயிற்சி நடத்து கொண்டிருக்கிறது.

மகாத்துமாவின் தீண்டாட்டம்.

—:o:—

காவ்யகண்ட கணபதி சாஸ்திரிக்கு வேண்டுகோள்,

(எம், என். முத்துக்குமாரசாமி பாவலர் எழுதியது.)

மகாத்மாவின் இத்தடவை தென்னாட்டு விஜயம் அவரைத் தீண்டாட்டத்தில் கொண்டுவந்துவிட்டது. பார்ப்பனர்களே அவரைத் தமிழ் நாட்டுக்கு கொணர்ந்து தங்களினத்தார்களாலேயேமகாத்மாவைக்கஷ்டப்படுத்திவைத்துவேடிக்கைப்பார்க்கின்றார்கள்.(மற்றவர்களை மகாத்மாவிடம் அனுமதிக்காத ஆச்சாரிய கோஷ்டி பண்டிதரென்போர்களை மட்டும் அடிக்கடி மகாத்மாவை அனுமதிக்கும்காரணமென்)பாவம் மகாத்மா ஒருபுறம் ப்ராமணர்களாலும் மறுபுறம் ப்ராமணரல்லாதாராலும் தாக்கப்பட்டு மத்தளத்தின் நிலைமையை அடைந்துவருகிறார் இன்னும் திரும்பிவரும் வாயில் என்னகதியோ? மகாத்மாஜீ தாங்கள் அடிக்கடி கட்டிக்கொண்டு அழும் வைதிகம் ப்ராமணீயம், இந்து தர்மம் சாஸ்திரம் ஸ்மிருதி வேதம், வருணாச்சிரமம், பகவத்கீதை, என்றகூறும் புராணக்குப்பைகளே தங்களை அவ்வித ஆபத்தில் கொண்டு வந்துவிடுகிறது. உதாரணமாக சமீபத்தில் மன்னார்குடியில் ஒரு ஆச்சாரியார் பகவத்கீதையைக்கொண்டே தங்களிடம்விதவாவிவாகம் தீண்டாமை முதலியவைகளைப்பற்றி எதிர்த்துப் பேசினார். தாங்களும் பதில் சொல்ல முடியாமல் திண்டாடித் திணறிகடைசியில் ஸ்மிருதிகளெல்லாம் ஹிந்து தர்மத்தை போதிய அளவு சொல்லவில்லையென்றீர் இவ்வுண்மைகாண இவ்வளவுநாள்சென்றது இன்னும் கூடிய சீக்கிரம் அதாவது தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்திற்குள் ஸ்மிருதிகளில் சுத்தமாக இந்து தர்மங்களே இல்லை யென்ற முடிவிற்கு வருவீர் என்பது திண்ணம். ஆதலால் மகாத்மாஜீ! தங்களைக் கேட்கச் சொன்வதாவது நம்மை சுயமரியாதை யற்றவர்களாகவும், தீண்டாமை விதவா விவாகம் முதலிய நற்செயல்களை ஓங்க விடாமல் செய்து வருவதான ப்ராமண பக்தி, வைதிகம், வருணாச்சிரமம், ப்ராமணீயம், புராணம், சாஸ்திரம், பகவத்கீதை முதலிய குப்பை கூளங்களை, மனித அறிவு, உலகானுபவம், மனச்சாட்சி சமதர்மம், யுக்தி, முதலியவைகளைக் கொண்டு வாரித் தள்ளிவிட்டு ப்ராமணர்களுக்கு பயப்படாமல் எதிர்த்தே நின்று வெற்றிபெற வேண்டும். அக்காலத்திய ஸ்வாமி விவேகானந்தர் இக்காலத்திய இராமசுவாமி நாயக்கர் இவர்கள் போன்று தைரியச்சிங்கமாய் நிமிர்ந்துநின்று போராடி நம் காரியத்தில் வெற்றிபெற வேண்டுமேயொழிய ப்ராமண மாய்கையில் மூழ்கிக்கொண்டு எல்லோருக்கும் நல்லவனாகப் போய் விடுவோமென்றெண்ணி விளக்கெண்ணெய்ப்பேச்சுபேசிக்கொண்டே தீண்டாமை, விதவா விவாகம் முதலியதுகளை விளக்கப் பார்ப்பது கல்லில் நாருரிருப்பதுபோலாகும் மகாத்மாஜீ தாங்கள் அடிக்கடி பகவத் கீதையைக் கொண்டுவந்து எக்காரியத்திலும் புகுத்துவது எனக்கென்னமோ மிகவும் மன வெறுப்பாகத் தோன்றுகிறது. பகவத் கீதை எது? எப்போது நடந்தது? எந்தத் துவாபர யுகத்திலேயோ நடந்தது இக்கலி யுகத்திற் கெப்படி பொருந்தும்? பகவத்கீதை உண்டென்பதற்கு ஆதாரமேது?சண்டை முகத்தில் சில வினாடிகளில் இவ்வளவுபெரியப்ரசங்கம் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குஎப்படி செய்ய முடியும் யார் பார்த்தது? யார் அதை எழுதியது. புளுகு, புளுகு, பெரும் புளுகு நீங்களே கீதைப்படி நடக்கின்றீர்களா கைராட்டினத்தைப்பற்றியும் காசு தண்டவும் அடிக்கடி பெண்களுக்கு பேட்டி கொடுக்கவும் தட்சணை வாங்கவும் ப்ராமணரைப் புகழவும் அவர்களை மந்திரியாக வைத்துக்கொள்ளவும் இரயிலில் ஜனங்களுக்கு முகத்தைக்கூடக் காட்டாமல் போகவும் பகவத் கீதையில் சொல்லியிருக்கிறதா? இவைகளெல்லாம் நம் சவுகரியத்திற்குச் செய்வது ஆக சவுகரியமே சாஸ்திரம் என எண்ணி பகவத்கீதை பழையபுராணம் இவைகளை வீசியெறியுங்கள். சுய நலப்புலிகளான ப்ராமணர்களே! மன்னார்குடி ஆச்சாரியாரே! உங்களுக்கோரு வார்த்தை! ஸ்மிருதிகளின்படி தன் ஜாதி கர்மாக்களை அனுஷ்டிக்காமல் பிரஷ்டர்களாய்ப் போகிறவர்களை தீண்டப்படாது என்று தாங்கள் மகாத்மாவிடம பேசியிருக்கிறீர். அதன்படியேஉங்கள் பிராமண ஜாதி யெல்லாம் ஒழுங்காய் நடக்கின்றார்களா? எத்தனை ப்ராமணன் தங்களின் ஜாதிகர்மாக்களுக்கு விரோதமாக மிலேச்சபாஷையென்னும் ஆங்கில பாஷையைப் படித்து மாட்டை அறுப்பது மனுஷனை அறுப்பது மீன்களைப் பார்வையிடுவது வெள்ளைக்காரனுக்குத் தண்டம் போடுவது முதலிய கேவலச்செய்கை செய்து வருகின்றார்கள். இவர்களெல்லாம்தீண்டப்படாதவர்கள்தாமே,

"மெழுகாலிலும், பாலாலிலும்உப்பாலிலும், விற்கும் ப்ராமணன் மூன்று நாளில் சூத்திரனாகி விடுகிறான், என உங்கள் மனு தர்மசாத்திரத்தில் காணப்படுகிறது. எத்தனைப் பார்ப்பான்கள் காபிகிளப், பலசரக்கு மண்டி, ஷாப்புக்கடை முதலியவைகள் வைத்து மேற்கண்டவைகளை வியாபாரம் செய்கிறான்! இவர்களெல்லாம் உங்கள் சாத்திரப்படி தீண்டப்படாதவர்கள் தாமே? மேலும் அதேமனு தர்மசாத்திரத்தில் "பிராமணன் யாதாமொரு சூத்திரனிடம் பிச்சை வாங்குவானாயின் அவன் பன்னிரண்டு ஜனனம் கழுதையாகவும், அறுபது ஜனனம் பன்றியாகவும், எழுபது ஜனனம் நாயாகவும் பிறப்பானென்று கூறுகிறது. இதன்படி ஆச்சாரியாரே நீராவது உங்களினத்தாராவது எங்களினத்தவர்களிடம் பிச்சையெடுத்துண்ணுதிருக்கிறார்களா? இதைவிட்டு மற்றதைப் பார்ப்போம். இளம் வயதில் பெண்கள் விதவையாகி தங்கவது இயற்கை அழகு குன்றினாலும் இயற்கையான இன்ப உணர்ச்சியின் துன்பம் தாளாது பலவித கேவல மான முறையில் விபசாரம் போகிறார்கள. இவைகளை நாம் அறிந்திருந்தும் பார்த்துக் கொண்டிருப்பதா? அன்றேல் இளம் விதைவைகளை மீண்டும் திருமணஞ் செய்வித்து நல் வாழ்க்கையை நடத்தும்படி செய்விப்பதா? ஐயோ பாபம்! இன்பத்தின் துன்பம் தாங்காது ஒரு ப்ராமண இளம்விதவை புதுச்சேரியில் ஒரு சாயபுவை வைத்திருப்பதை இன்றும் நிரூபிக்கிறேன். ஸ்ரீரங்கத்திலும் ப்ராமண விதவைகளின் திருவிளையாடல்களைப் பார்த்திருக்கிறேன் என்னே சமூக அட்டூழியம்! ஆச்சாரியாரவர்களே உத்சவ காலங்களிலும் தேரிழுக்கும் காலங்களிலும் தீண்டப்படாதவர்கள் வீதியிலேயே ஸ்வாமியை தெரிசனம் செய்துகொள்ளலாம் கோவிலுக்குபோக வேண்டியதவசியமில்லை என்று மகாத்மாவிடம் முட்டாள்தனமாக நீர் கூறியுள்ளீர் உங்களுக்கு மாத்திரம் கோவிலுக்குள் கர்பக்கிருஹம் வரையில் போக என்ன அவசியமிருக்கிறது? வடநாட்டிலிருந்து பிழைக்க ஓடிவந்த உங்களுக்கு அவ்வளவு அவசியமிருக்கும்போது அவர்களுக்கும் அவ்வளவு அவசியம் உண்டு. அவர்களில் உத்ஸவகாலங்களில் தரிசனம்செய்ய விடுவதற்கு நீரென்ன? நானென்ன? சர்க்கார் வீதியில் அவ்வளவு கும்பலில் பிரித்துவிடுக்க உங்களால் தான் முடியுமா? தேரிழுக்கும் காலங்களில் அவர்களை ஒன்றுகக் கலந்து கொள்ள விடுவதும் 'திருவிழா நாட்களில் தீட்டில்லை என்று. சொல்லி மழுப்புவதும் உங்கள் சுயநலத்தை உத்தேசித்து தான். அவர்களை விட்டு பாரமான தேரிழுக்கவிடா விட்டால் சோத்து மாடாகிய உங்களால் அக்காரியம் முடியுமா? தேரிழுக்க வேண்டியே விட்டுக் கொடுக்கிறீர்கள். சாஸ்திரங்களில் தீண்டாமையே கிடையாதென்று சாஸ்திர அறிஞர் திருவண்ணாமலை காவ்யகண்ட கணபதிசாஸ்திரி அவர்கள் நிரூபித்திருார். இவ்வருடத்திய "தமிழ்நாடு" போங்கல் மலரைப்பார்ப்பின் அவர் தின் கட்டுரை பஞ்சமன்யார், என்றகேள்வியின் கீழ் எழுதியிருப்பது நல்ல புத்திமதிவிக்கும் மகாத்மாவிடம் தர்க்கிக்கும் இவர்கள் காவ்ய கண்ட கணபதி சாஸ்திரியிடம் தர்க்கித்து பார்க்கட்டும். தமிழ்நாட்டில் நடக்கும் இந்நிகழ்ச்சிகளை பார்த்துக்கொண்டிருக்கும் காவ்ய கண்ட கணபதி சாஸ்திரி அவர்கள் வாளாவிருக்காது இப் பண்டிதர்களுக்கு புத்திவருமாறு ...ண்டாணமையை ஆதரித்து பத்திரிகையில் எழுதிவரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம்.

பார்ப்பனீயத்துக்குக் கருமா...

முனிசிபால் தேர்தல் இரண்டா... வார்டுக்கு முனிசிபல் தேர்தல் ...கிழமை நடைபெற்றது. பார்... பார்ப்பன ரல்லாதார் வென்று ... வோட்டுகள் சேகரிக்கப்பட்டன ...ியாக கீழ் கண்டவிதமாக வோ... கிடைத்தது. திரு. சின்னசாமி... யார் 157 வோட்டுகள் திரு. ... முத்துராஜா 137 திரு. பி. ... ராகவ அய்யங்கார் 92. திரு ... சினிவாச அய்யங்கார் 65 திரு ... சாமி உடையார். கோபால ... ஜா இருவர்களும் தேர்ந்தெடு...டார்கள்.

திருசினிவாசராகவ அய்ய... ருடங்களாக தொடர்ச்சியாக ... ராக யிருந்து வருகின்றார். ப... ல்லாதாரியத்தின் பல... கண்டதனவான் தோல்வியுற்...

அதுபோலவே சில தின... முன் நடைபெற்ற மற்றொரு ... ல் மளிகை வியாபாரி திரு... யாபிள்ளை இந்திய சட்டச... தினரான திரு கே.வி. அ... ய்யங்காரை தோல்வி யடை... ய்தார்,

நாடார் மஹாஜன சங்கம்.

பதினோராவது மகாநாடு

கும்பகோணம்.

ஆர். கே. ஷண்முகம் செட்டியார் எம். எல். ஏ.

அவர்கள் நிகழ்த்திய

அக்கிராசனப்பிரசங்கம்.

கனவான்களே!

[illegible]

வகுப்புணர்ச்சியும் தேசிய

உணர்ச்சியும்

[illegible]

...வாழ்க்கையில் உன்னுற ...யிருக்கிறது. இந்தக் கொள்கையில் ...டிருப்பவர்களுக்குத் தேசிய ...ஹம் பரந்த உணர்ச்சி ஏற்படு ...ஷ்டம். தேசியம் வகுப்புணர்ச் ...முற்றிலும் வேறானது என்று ...திம் இயலாததாகும்.

வாழ்க்கை நிலையின் பயனே

வகுப்புணர்ச்சியாம்.

...த்தை வளர்க்கும் கருத்துடை ...இந்த உண்மைத் தத்துவத்தை ...லேயோ, அன்றித் தமது ...வெளியிட்டுக் கூறி திருத்த ... அவலம்பிக்கத் தைரிய ...ர், என்னவோ நமது தேசிய ...ணர்ச்சியானது வெகு விதா ...தானிருந்து வருகிறது. ...ஆச்சரியமுமில்லை. கல்வி ...வாக இந்தத் தடை ...ந்து தொலைந்துபோம். ...நிலைமைக்கு வழியேற்பட்டு ...மிக்க ஆவலோடு எதிர் ...தோம். நமது நித்திய ...ல் நாம் காண்பவை உண் ...நாம் கொண்டிருந்த ...லமாயிற்று என்றுதான் ...ண்டும். இதுவரை மறை ... இந்த வகுப்புணர்ச்சி ...தவர்களிடத்திலே தான் ...சத்தோடு வெளிப்படு ...ாங்கிரஸ் மஹாசபை ...றைக்கு காற்பத்திரண் ...ன்றன. அந்த சபை ...டைய தேசிய ஸ்தா ...அதியுன்னதமானது ...கமேயில்லை. அப் ...வகுப்புணர்ச்சியானது ...ரி கோலமாய்க் கூத் ...ஹுங்கால் நமக்கு வரு ...க்கிறது. இந்த விஷ ...சிக்கலுப்பது என்ப ...னத்தலைவர்கள் இரா ...கொண்டிழைக்கின்ற ...டைபெற்ற மதுரை ...லே இங்கே குறிப்

பிட்டுக் காட்டுவது பொருந்தும் என நினைக்கிறேன். இந்தவிஷயம் வெறுங் கதையாய் ஒழியாமல், ஒரு நல்ல படிப்பினையை நமக்கு எடுத்துக்காட்டுகின்றதென்னலாம். அந்தத் தேர்தலில் ஒரு பிரிவில் வசிக்கும் படித்த வாக்காளர்களே காங்கிரஸ் அபேக்ஷகரை ஒதுக்கி விட்டு, வகுப்புவாரியில் ஈடுபடும் ஒருவரைத் தெரிந்தெடுத்தனர். இது வகுப்புவாரி உணர்ச்சிக்கோர் வெற்றி என்று நான் கூறமாட்டேன். நமது பொதுஜன வாழ்க்கை பலமாக ஊறியிருக்கும் ஒரு இயற்கைச் சக்தியின் பரிணாமம் என்றே நான் சொல்லுவேன். இதிலிருந்து நாம் ஒன்று சுலபமாகத்தெரிந்து கொள்ளலாம். தேசியக் கொள்கைகள் செழுமையுற்று வளராதபடி கெடுக்கும் நச்சுப்பூண்டுகளை பற்றற ஒழிக்கவேண்டும் என்பது தான் நாம் தெரிந்துகொள்ள வேண்டுவது.

தேசிய அபிவிர்த்திக்கு

ஜாதிப்பெருந்தடை

தேசியத்தின் வளர்ச்சிக்கு நச்சுப்பூண்டாக இருப்பது யாது? "ஜாதி" என்கிறோமே அது தான் அப்பூண்டு. ஜாதிவேற்றுமையை அடிப்படையாகக் கொண்டு நிற்கும் சமூக ஒழுங்கை அடியோடு களைதல் வேண்டும். அப்படிக் களைந்தாலொழிய நமது தேசிய நோக்க நிறைவேற்றமானது பரிபூர்த்தியடையவே அடையாது. அரைகுறையாகத் தானிருந்துவரும். இப்படி ஒரேயடியாய்ப் பேசவுணர்ச்சியைக் கிளப்புகின்ற இந்த விஷயத்தை, இந்த இடத்தில், இப்படி உறைத்துச் சொல்லுகிறேன். ஒருவித மனத்துணிச்சலோடுதான் சொல்லுகிறேன். இந்தக் கும்பகோணமானது இந்து சமயத்தில் வைராக்கிய சித்தத்தை உடையவர்களுக்கு ஓர் அரண் என்று நான் நன்கறிவேன். மஹாத்மா காந்தியடிகளையும் குற்றங்கூறி, காங்கிரஸ் மஹாசபைக்கும் எச்சரிக்கை செய்ய வல்ல பண்டித பரிஷத்துக்கு இக்கும்பகோணம் உறைவிடம் என்பது எனக்குத் தெரியும். அந்தப் பண்டிதர்கள் ஒருபுறமாக, தேசிய ஒற்றுமைக்குப் பெருந்தடையாய் இருப்பது சாதிவேற்றுமையில் பற்றுள்ளம் தான் என்று கூறுவாதாலும், நமது சமுதாய வாழ்க்கைக்கு அடிப்படையாயிருக்கும் பகுதியான இந்தப் புராதனக்கட்டுமானத்தை மூலதோஹானி செய்தால் ஒழிய, தேசியத்தை வளர்ப்பது இயலாததாகும் என்று சொல்லுவதாலும் இங்குள்ளவர்களிலும் சிலபேருடைய மனதை நான் புண்படுத்தினும் படுத்துபவனாவேன். ஜாதிப்பிரிவினை உணர்ச்சி வலுத்து நிற்கும்வரையும் தேசியத்துக்கு விரோதப் பான்மையுடைய வகுப்புவாரி உணர்ச்சி கூத்தாடிக் கொண்டுதானிருக்கும்.

ஜாதிப்பிரிவினைக்குக் காரணமாயிருந்த சமூகத்தின் சமூக நிலையையும், செல்வ நிலையையும் ஆராய்வது என்ன பலன் தரப்போகின்றது? இது விஷயமாக குறிப்பிட்ட ஒருவகுப்பினரைக் குற்றம் கூறுவதுதானும்பயன்படாது. ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. நமது சுவாதந்தியத்தில் இருப்பதைவிட முற்றிலும் வேறானநிலைமைக்குச் சாதகமாக இருந்திருக்குமோ என்னமோ? நானது தேதியில் ஜாதியானது நவீன தேசியத்துக்குமுற்றிலும் ஒவ்வாததாகஇருக்கின்றது. அன்றியும் தேசிய வாழ்வைப் பிரித்து வைக்கவும் செய்கின்றது. இந்த முறைக்கு யார் மூலதாரணமாயிருந்த போதிலும், தற்காலம் நம்மில் ஒவ்வொருவரும் அந்த முறைக்கு அடிமைப்பட்டிருப்பதுமல்லாமல் அந்த முறையை ஆதரித்தவர்களாயுமிருக்கிறோம். நானது தேதியில் இப்பெருந்தீமை நம் நாட்டில் உலாவிவருவதற்கு நாமனைவோருமே ஜவாப்தாரிகளாகின்றோம்.

ஒடுக்கப்பட்டோரும்

சுயமரியாதையும்

நமது ஜனசமூகத்துக்குள்ளே தாழ்ந்த வகுப்பினருக்குச் சுயமரியாதையுணர்ச்சி ஏற்பட்டதும் ஜாதியேற்பாட்டோடு போர் நிகழலாயிற்று. தாழ்ந்த வகுப்பினர் என்று சொல்லப்படுபவர்களுக்குள்ளே சுயமரியாதையைக் குறித்து எழுந்த இக்கிளர்ச்சியே இந்திய தேசியம் செழித்தோங்குதற்குரிய ஓர் நல்ல அறிகுறி என்னலாம். இந்தக் கிளர்ச்சியை கிளப்பினவர்கள் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் இந்தச்சாதிக்கட்டை எதிர்த்து வருவார்களேயானால் இக்கிளர்ச்சி நியாயமான, பயன்தருவது, என்று சொல்ல இடம் தரும். "இதுவரையும் கிளர்ச்சி செய்தார்களே. அதற்குத் தக்க பலன் கிடைத்திருக்கவேண்டுமே எங்கே?" என்றால் அதற்குக் காரணம் தம்மினும் மேலோர் என்று கருதுபவரோடு சமஉரிமை பாராட்டவும் அம்மேலோர் தம்மினும் கீழோர் என்று கருதுபவருடைய உரிமையை மதியாமையேதான் என்றுகூறலாம். ஒருவகுப்பு மற்றொரு வகுப்பைத் தன்னிலும் அந்தஸ்தில் தாழ்ந்தது என்றெண்ணுமானால், அவ்வகுப்பு சமூக அந்தஸ்தில் சமவுரிமை யடைய நியாயமாகபாத்தியமுண்டாகுமா? என் கருத்தை விளக்க உங்கள் வகுப்பினரையே உதாரணமாக எடுத்துக் காட்டுகிறேன். தாங்கள் தயவுசெய்து என்னைமன்னிப்பீர்களாக. சில வகுப்பினர் நாடார் வகுப்பினர்க்குச் சமவுரிமை வழங்குவதை மறுக்கின்றனர். நாடார்களுக்கு இது மனதுக்குப் பிடிக்கவில்லை. அதுவும் நியாயமே. ஆதலால் தங்களுக்கு சமவுரிமைக்குத் தகுதியுண்டு என்று அடிக்கடி கூறி வந்திருக்கின்றனர். இப்படிப் போராடுவதிலேயே தங்களை பிறப்பால் க்ஷத்திரியர்கள் என்று கூறிச் சமவுரிமைப் பாத்தியம் தங்களுக்குண்டென்று நாட்டி வருகின்றார்கள். இவ்வாறு சொல்லிச் சமவுரிமையை நிலை நாட்டுவது வருந்தத்தக்கதாக இருக்கின்றது. எப்போது உங்களை 'க்ஷத்திரியர்கள் நாங்கள்' என்று கூறத் தலைப்படுகின்றீர்களோ, அப்போதே நீங்கள் ஜாதியேற்பாட்டுக்குப் பெருமதிப்புக் கொடுத்துவிடுகின்றீர்கள். உங்களிலும் தாழ்ந்தவர்களாகக் கருதப்படும் வகுப்பினரை நடத்து முறையை உங்களிஷ்டம்போல வைத்துக்கொள்ளத் தலைப்படுகின்றவராவீர்கள். இப்படி வைத்துக்கொள்வது உங்களுடைய பாத்தியத்தை நியாய மார்க்கத்தில் கொண்டாடுவதாக ஆகாது என்றுதான் நான்சொல்வது. பூர்வீகமான வம்ச சரித்திரத்தை அநுசரித்து நீங்கள் மேல் நிலையை அபேக்ஷிப்பதற்கு இடமுண்டு என்பதைப் பாராட்டிக் கொண்டு சமவுரிமைப்போர் நிகழ்த்தாமல் 'நாங்களும் மனிதப்பிறப்பினரே? நாங்கள் சமமாக பாவிக்கத்தக்குத் தகுதியுடையோம்' என்னும் நியாய வழியானதைப் மறுக்க முடியாததுமான காரணத்தையே முன்னிட்டு போர் நிகழ்த்தி வருதல் விரும்பத்தக்கது, உங்களை அடக்கியாளும் இந்தச் சமூக முறையை அடியோடே மறுத்தொழித்து உங்கள் கொள்கையை நிலைநாட்டுவதற்கே முற்படுவீர்களாக! இனமே ஒவ்வொரு வகுப்பும் தன் தன் உரிமையை நிலைநாட்ட முற்படுமாயின் சமூகச் சீர் இருத்தமும், தேசியக் கட்டுமானமும் இப்போதை விட வெகு விரைவாகவே அபிவிர்த்தி யடைந்துவிடுமன்றோ!

தீக்க சிகிச்சை.

சமூகச் சீர்திருத்தத்தில் முனைந்து வேலை செய்கிறவர்கள் அடிக்கடி நமக்கு எச்சரிக்கை செய்து வருவதை நாம் பல தடவைகளிலும் கேட்டிருக்கிறோமல்லவா? 'சீர்திருத்த வேலையில் அவசரமும் ஆத்திரமும் வேண்டாம், நிதானமாகச் செய்யுங்கள்' என்பது தானே அந்த எச்சரிக்கை. சீர்திருத்தப் பாதையில் இளைப்பாற்றி மண்டபம் கிடையாது என்பது எனது திட்டமான எண்ணம். இந்த வகையில் நாம் சித்தியடைய வேண்டுமாயின் கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல்சிகிச்சைமுறைகளை அநுசரித்தல் வேண்டும். முஸ்தபா கமால் பாஷாவானவர் கண்டிப்போடு அடிவேரையே பற்றுவதாகிய முறையைக் கைக் கொண்டதினால் தானே துருக்கியர்கள் முன்னேற்ற மடையுமாறுசெய்தனர். பயந்து பயந்து செய்யத் தலைப்பட்டால் வருஷம் நூறானாலும் என்ன பலன் கிடைக்கும்? சீர்திருத்த விஷயத்தில் சாஸ்திர சம்பிரதாயத்தை எடுத்துக்காட்டுகிறவர்களோடு எனக்குக் கிஞ்சித்தும் அனுதாபங் கிடையாது. ஏனெனில் இத்யாதி விஷயங்களில் சாஸ்திரங்கள் நிறு திட்டமான வழியைக் கற்பிக்க மாட்டா என்பது திண்ணம். ஒரு விஷயத்தை நாட்டுவதற்கு காந்தியடிகள் சாஸ்திரங்களிலிருந்து இரண்டு ஸ்லோகங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டினால் அதற்கு மாறாக கும்பகோணத்துப் பண்டிதர்கள் இருபது ஸ்லோகங்களை எடுத்துக் காட்டி வாதிப்பார்களே. புராதன சாஸ்திரங்களைத் துணைக் கொண்டு கிளம்பும் சீர்திருத்தக்காரர்கள் மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கியவரேயாவார்கள். பகுத்தறிவு கொண்டு நிச்சயித்துக் கொள்ளக்கூடிய ஒழுக்க விதிகளுக்கெல்லாம் பழைய செல்லரித்துப்போன சாஸ்திரத்தைத் தேடியலைவதைவிடக் கேடான அடிமை வாழ்வு வேறே யுண்டோ?

தேசியத் தொடர்பில் வலியற்ற

பகுதி பிற்போக்கான வருப்புகளே!

நமது சமுதாயத்தில் அடிப்படை மாறுபாடுகள் ஏற்படவேண்டும், ஜாதிக்கட்டு ஒழியவேண்டும் என்பதைக் குறித்து இத்துணைத்தூரம் சொல்லவேண்டியது அவசியம்என்றெனக்குத் தோன்றிற்று. ஏனெனில் அடிப்படையான இந்தமாறுபாடு ஏற்படாத பட்சத்தில் வகுப்புவாரித்வக் கேடுகளை ஒழிக்கவேண்டும் என்று பேசுவதெல்லாம் யாதொரு பயனையும் தராது. சமூகச் சீர்திருத்தத்திற்குச் சாதகமான வழிகள் இவைதாம் இவ்வழிகளைகையாடித்தான் தீரவேண்டும்" என்று உறைத்துச் சொல்ல நமக்குத் திடமில்லையாயின் நமது செய்கையெல்லாம வீண்செய்கையாய்க்கழியும், காலமும் வீண்காலக்ஷபமேயன்றோ. நமது நாட்டில்உள்ள மஹோதிடம் வாய்ந்த பெரியோர்கள் ஜாதிக்கட்டு ஒழியட்டும் என்று உறைத்துசொல்ல முற்பட்டு வருவார்களானால், இந்திய தேசிய வாழ்வு பலப்பட்டுப் பேராற்றல் படைத்ததாகும்.

பிற்போக்கான வகுப்பினர் தமது சுயமரியாதையை வற்புறுத்த முற்படுவதுதான் இந்திய தேசிய வாழ்வு வளரவும், ஜனநாயகக் கொள்கை பரவவும் முக்கிய சாதன மாகும். இவ்வகுப்பினர் இருப்பது தான் தேசிய வளர்ச்சிக்குத் தடையாக வுள்ளது தேசியச்சங்கிலித் தொடரில் வலிகெட்ட சங்கிலி இந்த வகுப்புத்தான், வகுப்புவாரிக் கூட்டங்கள் கூடித் தங்கள் ஒழுக்க நிலை, பொருளாதார நிலை இவற்றை விருத்தி செய்துகொள்ள முற்படுமானால், தேசிய அபிவிருத்திக்கு அது வெகுதூரம் உதவியாக இருக்கும். ஒரு வகுப்பு க்ஷேமமாக இருக்கவேண்டு மானால் அதுபொருளாதார நிலையைத்தான் அடிப்படையாககொண்டு நிற்கும். நாடார் மஹாஜன சங்கமானது தன் வகுப்பினரின் பொருளாதார நிலையை விருத்திசெய்யப் பலவேறு வழிகளில் முயன்று வருகின்றது என்பது எனக்குச் சந்தோஷத்தைத் கொடுக்கின்றது. இந்த முறையில் நீங்கள் கூடியமட்டிலும் அதிகபலனை அடையவேண்டுமாயின் நீங்கள் செய்யும் முயற்சி ஒழுங்காகஇருக்கவேண்டும் நல்ல ஒத்துழைப்புடையதாக இருக்கவேண்டும்.

சமுதாயவேலை நேர்வழியில்

நிகழவேண்டும்.

சமுதாய வேலைகளும் ஔபகாரிக வேலைகளும் ஒருவராலேயோ வகுப்புவாரிச் சங்கங்களாலேயோ ஏற்படுகின்றன ஆனால் அவ்வேலைகள் திராவிடேசித்துகண்ட நிறுதிட்டமான வழிகளில் நடைபெறுத்து வருத்தத் தக்கதே. ஏதோஒருசிலஏழைச்சிறுவர்களுக்குப்பணவுதவிபுரிதல், அல்லது ஒருகூட்டுறவுச் சங்கத்தைஸ்தாபித்தல்ஆகிய இவற்றைச் செய்துவிட்ட அளவிலே சமுதாய நன்மை நாடிய வேலைகளையெல்லாம் செய்தாய்விட்டது என்று நினைத்துக் கொள்வது சர்தாரணமாக இருக்கிறது. இவ்வளவுசெய்தும்நமது எண்ணம்கடேறவில்லையே, எண்ணிய அளவு பலிக்க வில்லையே என்றால் அதற்குக் காரணம் சிகிச்சா முறைகள் தக்கவழியில் கையாளப்படவில்லைஎன்பதுதான். நம்முடைய நாட்டிலே சீர்திருத்த வேலையானது வெகு தாராளமான தோரணையில் செய்யவேண்டும். அப்படியிருக்க ஒருவரை மட்டில் நெருக்கித் திருப்பிவிட்டால் போதுமா? ஒருவேளை அவ்வொருவர் முக்கியஸ்தராக இருக்கலாம், அவரை அவருடைய குடும்பம் ஊர் இவைவிட்டு விட்டுத் தனித்துவரச் செய்வது தருமமா? இக்காலத்தில் படித்த ஒருவன் தன் குடும்பத்தில், தன் சமூகத்தில், ஓரயலானைப் போல வாழுகிறானே. இது எவ்வளவு பெரிய சங்கடம். இவ்வணமாக அவன் தன் சுற்றச் சார்புகளுக்கிணங்கி, தான் கலாசாலையிற் கற்ற உயரிய எண்ணங்களைப் பகற்கனவாக்கி விடுகின்றானே என்றால் அது ஓர் புதுமையா? ஒரு குடும்பமும் அஃதிருக்கும் கிராமமும் என்னும் இரண்டும் சமுதாய வேலைக்கு ஒருங்கே கட்டுப்பட்டதாகக் கணித்தல்வேண்டும்.

கிராமப் புனர் நிர்மாணம்.

எந்த வகுப்பினராயினும் சரி, கிராமப் புனர் நிர்மாணத் தொழிலை மேற்கொள்ளல் வேண்டும். மேற்கொண்டு அதிலுள்ள பொது ஜனங்களின் நிலைமையைப் பண்படுத்த முயலுதல் வேண்டும். சமுதாய வேலைக்கு கிராமச் சீர்திருத்தம்தான் முக்கியமானது. கிராமத்தானின் வாழ்க்கைக்குரிய எல்லா விஷயங்களிலும் சிந்தையைச் செலுத்துவது இன்றியமையாததாம். விவசாயிக்குக் குறைந்த வட்டிக்குக் கடன்தந்துதவக்கூட்டுறவுமுறையில் பாங்கு ஒன்றை ஸ்தாபித்துவிட்டால் மட்டும் போதுமா? பாங்கியை ஏற்படுத்துவதோடு நில்லாமல், அந்த விவசாயியானவன் கடனிலே மூழ்கிவிடாதபடி அவனுக்குக் கூட்டுறவு முறையைக் கற்பிக்கவும் வேண்டும். கலியாணச்செலவு, சாவுச்செலவு, வியாச்சியப்பற்று, சிக்கன மின்மை, விவேகமின்மை ஆகிய இவைகளே இந்தியாவில் ஒரு கிராமத்தானைக் கடனில் மூழ்கிவிடச் செய்வதற்குப் போதிய காரணங்களாம், கூட்டுறவுப் பாங்கி ஒரு கிராமத்தில் பெரும் பயனை அளிக்க வேண்டுமானால் கிராமவாசிக்கு விவாகாதி சடங்காசாரங்களில் அநாவசியமான அதிகச் செலவு செய்யாதபடி நன்றாய்க் கற்பிக்க வேண்டும். இங்ஙனம் அவனுக்கு பல வழியிலும் நல்லறிவுச் சுடர்கொளுத்தாதபடி அவனுக்குச்செய்யும் உதவியானது நிலவரமான உதவியாகாது என்று தான் சொல்லவேண்டும். இந்தியாவில் இருக்கும்ஜனங்கள் எல்லோருமே நாம் முன்னேற்ற மடையவேண்டும். அதற்கு நம்மில் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கமில்லாதவராகவே இருக்கின்றனர். சமூக நிர்மாண வேலையின் முக்கிய நோக்கம் ஜனங்களுடைய நோக்கத்தையே மாற்றுவதாக இருத்தல் அவசியமாகும்.

இந்திய கிராமங்களைப் பற்றி ஓராசிரியர் பின் வருமாறு தமது நூலில் எழுதியிருக்கிறார். "பிரிட்டிஷ் இந்தியாவில் ஐம்பது லட்சம் கிராமங்கள் மண் குடிசை நிறைந்தவைகளாயிருக்கின்றன. அநேகமாக அவைகளிலே ஒரு இடத்தில் மண்ணை வெட்டியெடுத்துக் கொள்வார்கள். அங்கே ஒரு பெரிய பள்ளமாய் விடும். அதன் மேட்டிலே குடிசை கட்டி விடுவார்கள். ஒரு மழை பெய்தால் அந்த பள்ளத்தில் மழை நீர் நிரம்பிவிடும் அப்புறம் அது தான் அந்த கிராமத்துக் குளம், அதற்கப்புறம் அதிலேதான் அந்தக்-கிராமத்தார் குளிப்பது அணிமணிகளைத் தேய்ப்பது, பண்டம் பாத்திரங்களைத் துலக்குவது, கன்றுகாலிக்குத் தண்ணீர் காட்டுவது, சமையலுக்குத் தண்ணீர் மொண்டு கொள்வது அந்த குட்டைப் பக்கத்திலே தான் ஜலமலவிசர்ஜனம் செய்வது. தாகசாந்தி செய்துகொள்வது எல்லாம் அதிலேதான்" சாதாரணமான ஒரு இந்திய கிராமத்தைக் குறித்து இப்படிக் கற்பித்தது அதிக யோக்கியமாக இருப்பினும் இருக்கலாம் நம்முடைய கிராமாந்தரங்கள் சுகாதார விஷயங்களில் கவலையின்றி இருக்கின்றன என்பதைத்தான் இது நமக்கு நன் கெடுத்துக்காட்டுகின்றது. நாம் நமது புராதன நாகரீகத்தைப் பாராட்டி எவ்வளவு பெருமை பேசிக்கொண்டாலும் சுகாதாரம் நோயற்ற வாழ்வு ஆகிய இவற்றில் கேழ்க் கணக்குத் தானும் நாம் கற்றுக்கொள்ளாதிருக்கிறோமே என்பதைக் கவனிக்கும்போது நாம் நாணித் தலைகுனிய வேண்டியது தான். எந்த கிராமத்துக்குப் போனாலும், அங்கே முதலில் குப்பை கூளங்களையும் துர்நாற்றத்தையுமே காண்கின்றோம் என்று தான் கூசாமல் சொல்லவேண்டியிருக்கிறது. இராப்பள்ளிக்கூடங்கள் எத்தனை ஏற்பட்டாலும் சரி கூட்டுறவு பாங்குகள் எத்தனை ஏற்பட்டாலும் சரி அவைகளாலேயே ஒரு கிராமத்தின் சுகாதார நிலைமை சீர்பெற்று விடும் என்று சொல்ல முடியாது. நமது ஜன சமுதாயத்தின் பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை முறையையும் அடியோடு மாற்றுதற்குரிய வழிவகைகளில் அவசியம் நமது கருத்தை நாம் செலுத்துதல் வேண்டும்.

சிறுவருக்கோர் முயற்சி துறை.

மதுரை இராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களில் கிராமங்களிலே நாடார் வகுப்பினர் பெருங்குடி மக்களாக இருக்கின்றார்கள் என்று தோன்றுகிறது. இந்த கிராமங்களிலே உங்களுடைய சங்கமானது நிதானமாகவே பலன் படும்படியாய் வேலையைச் செய்ய இடம் ஏராளமாக இருக்கிறது. கிராம புனர் நிர்மாண வேலையில் உங்களிலே கல்விப் பெறடைந்த சிறுவர்கள் பெருமைக்காக வன்றி தேசியத்துக்காக உழைக்க வழி யிருக்கின்றது. இவர்கள் தங்கள் காலத்தையும் முயற்சியையும் உத்தியோக நாட்டத்திலே செலவழித்து ஏமாற்றமடைய வேண்டிய அவசியமில்லையே. உள்ளூர்க்குழைப்பதை ஒவ்வொரு கல்விப் பெறடைந்த சிறுவனும் தனக்குரிய கடமை யாகக் கொண்டொழுகட்டும். அப்போதைக்கப்போது சென்று பிரசங்கம் செய்வதினாலேயே கிராமங்களைச் சீர்திருத்திவிட முடியாது. சுகாதாரம் சுக பரிபாலனம், சிக்கனம் ஊரின் க்ஷேமத்தை நாடுதல் ஆகிய இவைகளையே தனது முழுநோக்கமாகக் கொண்டு உற்சாகத்தோடுழைக்கும் சிறுவர்களின் முயற்சினாலே சீர்திருத்தம் கைகூடும். இக்கியாவானது தருமத்துக்குத் தாயகமாயிருக்கலாம், அநேகமாக இந்தத் தருமங்களெல்லாம், நேரிய வழியில் நடையேறுதல் இல்லை, துர்விநியோகமும் படுகின்றது. இப்போது நமது நாட்டிற்கு வேண்டிய தெல்லாம், "தங்களைக் காட்டிலும் அதிருஷ்டத்தால் குறைவுபாட்டினையுடைய சகோதரர்கள் இருக்கும் இடங்களிலே அவர்களுடைய நிலைமையைப் பண்படுத்தத்தக்க வழியில் முயலுதற்குரிய உத்வேகமும் உபகார சிந்தையும் பெரிதும் வாய்ந்த சிறுவர்களேயாம்." பொது ஜனங்களை எல்லா வழியாலும் ஈடேற்றவேண்டுமானால் இந்த நல்லுணர்ச்சியானது ஓங்கி வளர்தல் வேண்டும். உங்கள்வகுப்புச்சிறுவர்களுக்கு இதைநான் எடுத்துக் கூறுகையில் அவர்களுடைய ஜீவனத்துக்கு வழி என்னவென்பதை நான் மறந்துவிட்டதாகக் கொள்ளீர்கள். உங்களுடைய சங்கம்தான் உதவி செய்ய முற்பட வேண்டும் நாடார்கள் எல்லாம் விவசாயச் செழிப்பும்; வியாபாரச் செழிப்பும் உடையவர்களே, உங்களுடைய வகுப்பாரின் முன்னேற்றத்தைக்குறித்து "மகிமை!" என்னும் ஏறக்க மாமூல்படி பொருள் சேகரம் செய்கிறீர்கள் என்பதாகத் தெரிகிறது. தங்களுடைய சமூக வேலையைச்செய்துகொண்டு கிராமாந்தரங்களில் உழைக்கின்ற சிறுவர்களைக்காப்பாற்றுவதற்கு அந்த மகி

(2-ம்பக்கத்தின் தொடர்ச்சி)

சேகரிக்கலாமென்று கேட்கலாம், இது நாம் கவனிக்க வேண்டிய ஒரு விஷயமே. போகப்போக இக்கைத்தொழில்களில் ஊதியம் கிடைக்குமெனினும் முதலில் பொருள்செலவு செய்தாலல்லாமல் இவைகளை ஆரம்பிக்க இயலாது. சர்க்காரில் புதிய கைத்தொழில் ஸ்தாபிப்போர்களுக்குச் சொற்பஉதவி செய்வதற்கென ஒரு ஆக்ட் ஏற்படுத்தி அதன்படி ஒத்தாசை செய்கிறார்கள். ஆயினும் நாம் மிகுதியும் அதை எதிர்பார்த்து இருப்பது நன்றன்று. நமக்கு வேண்டிய மூலதனத்தை எப்படிச் சேகரிக்கலாமென்று அடுத்த தலைப்பின் கீழ்க் கூறுகின்றேன்.

நமது புதிய கைத்தொழில்கள் ஸ்தாபனம் செய்து வியாபாரத்திற்கென மிகுதியான பொருள்கள் தயாரிப்பதாக வைத்துக் கொள்ளுவோம். இவைகளை எவ்வாறு நாம் பரவச் செய்வது? தற்காலத்தில் பிரசுரங்களினாலேயே தான் வியாபாரப் பொருள்கள் எங்கும் பரவுகின்றன. ஆகவே கைத்தொழில்களும் விருத்தியடைகின்றன. மேனாட்டார் வருடமொன்றுக்கு லக்ஷக்கணக்கான பவுன்கள் பிரசாரத்திற்கென்று செலவிடுகின்றனர். "பிரசுரமின்றேல் வியாபாரம் குறைவு என்பதை அவர்கள் நன்குணர்ந்துள்ளனர். நாமும் பிரசாரத்திற்காகப் பொருள் செலவிட வேண்டுவது அவசியம். ஆயினும் கருத்துடன் கவனித்துப் பிரசாரம் செய்வதனால் அதனால் ஏற்படும் செலவை மிகுதியும் குறைக்கலாம்.

மிகுந்த லாபத்தை முதலிலேயே எதிர்பார்த்து நாம் அனேக புதிய சில்லரைக் கைத்தொழில்களை ஸ்தாபிப்போமாயின் நமக்கு அவைகளினின்றும் அளவற்ற நன்மை ஏற்படுமாதலின் அவைகளை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளை நாம் செய்வோமாக!

நாணயமும்—கூட்டுறவு

முறைகளும்.

இக்காலத்தில் தொழிலும் வியாபாரமும் பெருவாரியாய் நடப்பதால் அவைகளுக்கு வேண்டிய பொருளுதவியை ஏராளமாய் ஒருவரே செய்தல் முடியாததாகும். இதைக் கொண்டே எவ்வித அபிவிருத்திக்கும் கூட்டுறவு முறைகள் கையாளப்படுகின்றன. கூட்டுறவு இலாகாவும் சங்கங்களும் எவ்வளவு உபயோகமாயிருந்து வருகின்றனவென்பதை நான் உங்களுக்குக் கூறவேண்டுவதில்லை. இனி நாம் எவ்விதம் இக்கூட்டுறவு முறைகளைக் கையாளலாம் என்பதைமட்டும் ஆலோசிப்போம்.

ஜப்பான் தேசத்திலும் மற்றும் சில தேசங்களிலும் அரசாங்கத்தாரே தொழிற்சாலைகளுக்கு வேண்டிய உதவி புரிந்து அவைகள் பொருள்கள் தயாரிப்பதற்கான ஒத்தாசை செய்கின்றனர். பின்பு இப்பொருள்கள் தயாரிக்கப்பட்டதும் அவைகளை எங்கும் வியாபார மூலமாய்ப் பரவுவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமோ அவைகளையும் அரசாங்கத்தாரே செய்கின்றனர். ஆனால் நமது நாட்டிலோ பொருள்களைத் தயாரிப்பதற்கோ அவைகளை விற்பனை மூலம் பரவச் செய்வதற்கோ அரசாங்கத்தார் புரியும் உதவி ஒன்றும் கிடையாது. ஏதோ சிற்சில கைத்தொழில்களை ஸ்தாபிப்பதற்கு மட்டும் சிறிது உதவி செய்கின்றனர். ஆகவே இவ்விரண்டு தொழில்களையும் நாமே செய்துகொள்ளவேண்டும்.

முதலில் நமக்கு வேண்டிய பொருளுதவியைப் பற்றிக் கவனிப்போம். மேனாட்டில் அநேக நாணயச்சங்கங்கள் (Banks) கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலதனங்களைக் குறைந்த வட்டிக்குக்கொடுத்துதவுகின்றனநாமும் ஒரு நாணயச்சங்கம் நடத்தி வருகின்றோம். ஆயினும் இதன் மூலதனம் குறைவாயிருப்பதால் இது பெரிய கைத்தொழில்களுக்கு வேண்டிய உதவிசெய்ய முடியாது. அன்றியும் பல இடங்களிலும் இதன் கிளைகள் இல்லாததால் ஆங்காங்கு வேண்டிய திரவிய சகாயம் செய்ய இயலாது. ஆகவே நம் நாணயச் சங்கத்தின் உபயோகம் அதிகரிக்கவேண்டுமென்றால் அதன் கிளைகள் எங்கும் ஸ்தாபிக்கப்பட்டு ஆங்காங்கு திரவியம் சேகரித்து புதிய கைத்தொழில்களுக்கு வேண்டிய திரவிய சகாயம் செய்யவேண்டும். இவ்வாறு ஏற்பாடுசெய்தால் அன்னிய நாணயச்சங்கங்கள் லாபம் குறைவதன்றி நம் கைத்தொழில்களும் நாளுக்கு நாள் விருத்தி யடையும். இதைக்கொண்டு உபயோகமற்ற லாபத்தை மட்டும் எதிர் பார்த்துகைத்தொழிலையும் நாம் ஆதரிக்க வேண்டுமென்று நான் கூறுவதாகக்கொள்ளலாகாது. எக்கைத் தொழில்கள் நிரந்தரமான லாபத்தை அளிக்குமென்று நாம் அறிந்திருக்கிறோமோ அவைகளுக்கு மட்டும் நாம் உதவிபுரியலாமல்லவா?

மூலதனத்தின் குறைவினால் ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கு "கூட்டுறவு" முறைகள் பெரிதும் பயன்படுகின்றன. இவைகளைப்பற்றி விஸ்தாரமாக உங்களைப்போன்ற தேர்ந்த வியாபாரிகளுக்கும் தொழிலதிபோகஸ்தர்களுக்கும் நான் எடுத்துக் கூறுவது மிகையாம். ஆயினும் இவ்விஷயங்கள் நம் வகுப்பினர் யாவருக்கும் தெள்ளற விளக்கவேண்டுமென்பதே என் நோக்கம். தற்காலத்திலிருப்பதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகக் கூட்டுறவுச் சங்கங்கள் நமது நாட்டுப்புறங்களிலும் நகரங்களிலும் ஸ்தாபனமாவதற்கு இவைகளைப்பற்றி அறிவே முக்கிய சாதனமாகும். இக்கூட்டுறவுச் சங்கங்கள் செய்யும் வேலைகள் அநேகம். உண்ணமுதலாவது ஆங்கங்குள்ள பொருளைவாங்கிச் சேகரித்து வைத்துக்கொள்ளலாம். பிறகு இப்பொருளைலாபகரமான தொழில்களைச்செய்யவிரும்பும் யோக்கியப் பொறுப்பான நம் வகுப்பினருக்கு குறைந்த வட்டிக்குக் கொடுத்துதவலாம். மிகுந்த வட்டிக்கு கடன் வாங்காது நம் வகுப்பினரைத் தடுத்து உதவி புரியலாம், பெரிய கைத்தொழில்களை நடத்துவதற்கான நவீன கருவிகள் முதலியவை வாங்குவதற்குப், வேண்டியசகாயம் செய்யலாம். நாம் ஏற்கனவே கூறியுள்ளவாறு பெரிய கரும்புத் தோட்டங்கள் வாங்குவதற்கும், சர்க்கரை ஆலைகள் ஸ்தாபிப்பதற்கும், காய்ச்சுவதற்கும் இவ்வித கூட்டுறவு முறைகள் மிக உதவியாயிருக்கும். கைத்தொழில்களுக்கேயன்றி விவசாயத்திற்கும் அளவிறந்த நன்மை இவ்விதக்கூட்டுறவுச்சங்கங்களால் ஏற்படும் நம்மில் அநேகர் வியாபாரிகளாயும், தொழில் செய்பவர்களாயும் இருக்கிறார்களேயன்றி விவசாயிகள் சொற்பம் என்பதால் நான் அதிகம் விவசாயத்தைப்பற்றி கூறாதுவிட்டேன். நமது ராஜப்பிரதிநிதி விவசாயம் முன்னேற்றமடைய வேண்டுமென்ற ஒருபெருநோக்கம் கொண்டவர் என்பதை நீங்கள் அறிவீர்கள். நமது மாகாண அரசாங்கத்தாரும் சில நாட்களுக்குமுன் புவிவசாயத்திற்காகப் பொருளுதவி செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். ஆகவே, இச்சமயத்தில் நம் கூட்டுறவுச்சங்கங்களும் அதிகம் ஸ்தாபிக்கப்படின் விவசாயம் நன்கு விருத்தியடையும் என்பது திண்ணம். நம்கைத்தொழிலுக்கு வேண்டிய இயற்கைப்பொருள் அனைத்தும் விவசாயத்தைவிருத்தி செய்வதால் நாம் எளிதில் பெறக்கூடும்.

மிறகு, நமதுநாணயச்சங்கங்களும் முறைகளும் அபிவிருத்தியடைய வேண்டியிருந்தால் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுளது. அதாவது நம் இளைஞர்களில் அநேகருக்கு இம்முறைகளில் தேவையான பயிற்சி அளிக்கவேண்டும். இதற்காக நம் பள்ளிக்கூடங்களிலேயே வேண்டிய சில பாடங்களும் பயிற்சியும் கொடுக்கப்படலாம். கூட்டுறவு முறைகளிலும், நமது இளைஞர்களுக்குப் பயிற்சி முக்கியம். தஞ்சாவூரில் இம்முறைகளில் பயிற்சியளிக்கும் பொருட்டு ஒரு பாடசாலை ஏற்படுத்த உத்தேசித்துள்ளனர். இந்த நோக்கத்தை ஒட்டியே நம் மாணவர்களையும் தேர்ச்சி யளித்தற் பொருட்டு நாமும் நம் பாகங்களில் இவ்வித பாடசாலைகள் ஸ்தாபிக்கலா மென்று எனக்குத் தோன்றுகின்றது.

சமுதாயச் சீர்திருத்தம்

நமது சமுதாய வாழ்க்கையைப் பற்றியும், அதில்ஏற்பட வேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றியும் நாம் சற்று கவனிப்போம். சுயநலங் கருதாது ஊழியம் செய்யவேண்டுமென்று விருப்பம் மிகுந்த வாலிபர்கள் செய்யக்கூடிய வேலை இதில் தான் அதிகம் உள்ளது. பரம்பரையான பல பழக்க வழக்கங்களும் கொள்கைகளும், நம் சமுதாய வாழ்க்கையில் அநேகம் உள்ளன. அவைகளில் சீர்திருத்த முறவேண்டிய சிலவற்றைமட்டும்தான் இங்கு கூறுகிறேன். ஆனால், இச்சீர்திருத்தங்களெல்லாம் இன்றே ஏற்பட்டு பழைய பழக்க வழக்கங்கள் மாறவேண்டுமென்று நான் சொல்வதாகக் கொள்ளலாகாது. ஒற்றுமையாக வேலை செய்தால் நாளடைவில் இவ்விதச் சீர்திருத்தங்கள் ஏற்படலாமென்று நான் நம்புகிறேன். சமுதாயவிஷயங்களில் திடீரென பெரிய மாறுபாடுகளை ஏற்படுத்த முயல்வதைவிட நிதானமாய் போவது முற்றும்பயனளிக்கத்தக்கதாகும்.

முதலில் நாம் செய்துவரும் பயனற்ற வீண்செலவுகளைக் கவனிப்போம். கடன் வாங்கியும் நம்மில் அநேகர் மணம் முதலிய சுப சடங்குகளுக்கும் சாவு முதலிய அசுப சடங்குகளுக்கும் ஏராளமான பொருட் செலவு செய்கின்றனர். இதனால் நம்மவரில் அநேகர் தீராக்கடன் சுமக்கும்படி நேரிடுகின்றது. இதைத் தடுப்பதற்கு நம் மாலியன்ற முயற்சியை நாம் செய்ய வேண்டும். நமது ஜனங்களுக்கு அறிவு புகட்டுமாறு பிரசுரங்களினாலும் அடிக்கடி பத்திரிகைகளின் வாயிலாகவும், நாம் அறிவு புகட்டலாம். பிரசாரகர்கள் எங்கும் சுற்றி இவைகளைக் கண்டித்துக் கூறுவதாலும் சீர்திருத்தம் ஏற்படும்.

இனி நம் வாலிபர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்கள் படியும் பொருட்டும், நாம் சமுதாய ஊழியஞ் செய்யலாம் காட்சிகளின் மூலமாக மதுவிலக்கு முதலிய பிரசாரங்கள் செய்தல் கூடும். ஏழை மாணவர்கள் கல்வி கற்றற்பொருட்டு விடுதிகள் அமைப்பதும் அவர்கள் போஷணைக்கான திரவியம் சகாயம் செய்வதற்கு நிதி சேர்ப்பதுமான இத்தகையவேலைகளும் சமுதாய வாழ்க்கை நலத்திற்கென நாம் கைக்கொண்டு நடத்தலாம். கிராமங்களில் காலரா, அம்மை முதலிய தொத்து வியாதிகள் வாராமந்தடுக்கும் உபாயங்களை நம் ஜனங்களுக்குப் போதிப்பதும் வியாதிகள் வந்தகாலத்து அவை பரவாது தடுப்பதற்கும் வேண்டிய உபாயங்களைச் செய்வதும் சமுதாய ஊழியத்தின் ஒரு பகுதியாகும். இன்னும் கிராமங்களுக்கு வேண்டிய பல உதவிகளும் புரியலாம். இவ்வித நோக்கங்களோடு 'சமுதாய ஊழிய சங்கங்கள் ஏற்படுத்துதல் அவசியம். ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களில் இவ்விதச் சங்கங்கள் ஏராளமாய் ஸ்தாபனமாகி அளவிறந்த நற்பயன் விளைக்கின்றன. ஊரை சுத்தமாக வைப்பது முதல் பஞ்ச நிவாரணம், வெள்ள நிவாரணம் வரை இவைகள் அநேக உபயோகமான காரியங்கள் செய்வதற்கேற்ப விருத்தியடைந்துள்ளன. இம்மாதிரி ஊழியஞ் செய்யக்கூடிய நாமும் ஸ்தாபித்து நமது சமுதாய நலத்தை முன்னடையச் செய்யவேண்டுமென்பது என் நோக்கம்.

கிராமப் புனர் உத்தாரணம்

நமது தேசத்தின் கிராமங்களைப் புத்துயிர்ப்பிப்பதற்கான ஒரு இயக்கம் நாடெக்கும் ஏற்பட்டிருப்பது உங்களில் அநேகருக்குத் தெரியுமென எண்ணுகிறேன். நமது மந்திரி மாரும் இதற்கான வேலையை ஆரம்பித்துள்ளனர். நமது நலங்கருதும் ஒவ்வொருவரும் இவ்வியக்கத்தில் ஈடுபட்டு தம்மாலியன்ற ஊழியம் செய்யவேண்டுமென்பது அவசியம். நமது நாட்டில் பெரும்பான்மையோர் மிகுந்த காலமாகவே கிராமங்களிலேயே வசிக்க விரும்புகின்றனர். இதற்குக் காரணங்கள் பல உள. இவ்வாறு கிராமங்கள் மிகுந்து செழித்திருந்த நம் நாட்டில் தற்காலத்தில் பல காரணங்களைக்கொண்டு அநேக கிராமங்கள் அழிவு அடையக் கூடியனவாயுள்ளன. இவைகளை எவ்வாறு அழிவுறாது காக்கலாம் என்பதே இவ்வியக்கத்தின் நோக்கம். நாம் எவ்வித ஊழியம் செய்யலாமென்பதை மட்டும் நான் சுருங்கக் கூறுவேன்.

முதலாவது நமது நாட்டுப்புறங்களின் தற்கால நிலைமையைக் கவனித்து நாம் அறியவேண்டும். அவைகளின் குறைவுபாடுகள் எவை என்பதைக் கண்டுகொள்ள வேண்டும். இக்காரியத்திற்கு நமது வாலிபர்களே முன்னின்று செய்யவேண்டும். இவர்களால் நடத்தப்பட்டுவரும் புனர் உத்தாரண சபைகள் எங்கும் ஏற்படுத்தப்படுவதோடு ஓர் மத்திய சபையும் ஸ்தாபிக்கப்படல் அவசியம். சில கிராமங்களில் கல்வி பயிற்றுவிப்பதற்கு வேண்டிய வசதிகள் இல்லாமலிருக்கலாம். இங்கு அவ்வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கலாம். நவீன முறைகளும் விஷயங்களும் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் கற்பிக்கப்படலாம். இது சம்பந்தமாக கண்காட்சிகளும், பொருட்காட்சிகளும், ஏற்படுத்தப்படின் நலமாயிருக்கும். அவைகளைக் கொண்டே கிராமங்களை சுகாதாரவிதிப்படி வைத்துக் கொள்ளுவதற்கும், நோயற்ற வாழ்வைப் போதிப்பதற்கும் நோய் வந்தகாலத்தில் அவைகளைத்தடுப்பதற்கும் வேண்டிய அறிவையும் ஊட்டலாம். கிராம விவசாயிகளுக்கு புதியவிவசாயமுறைகளின் நலத்தையும் கூட்டுறவு முறைகளின் மேன்மையையும் எடுத்துக் காட்டி பிரசாரங்கள் செய்யலாம். இவ்வித பிரசாரங்கள் செய்யக்கூடிய தேக வன்மையும், மனவன்மையும் நமது இளைஞர்களுக்கே உண்டாதலின் அவர்கள் இவ்வூழியத்தில் ஒரு கருத்து வைக்கும்படி நாம் அவர்களைத் தூண்டவேண்டும். இன்னும் அநேக விதங்களில் நம் கிராமங்கள் மலின மடையாதபடி தடுப்பதற்கும் மலின மடைந்தவைகளைப் புத்துயிர்ப்பிப்பதற்கும் முயற்சிகள் செய்யலாம். நான் கூறியுள்ளவை மிகச் சிலவே. இவற்றிற்கு வேண்டிய பொருளுதவியை நம் கிராமங்களின் பொருட்டும் அவைகளில் வசிக்கும் நம் வகுப்பாரை முன்னிட்டும் நாம் செய்யக் கட்டுப்பட்டிருக்கிறோம் நமது வாலிபர்கள் இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன் வருவார்களாக.

ராஜீய விஷயங்கள்

ராஜீயத் துறையில் நாம் எப்பொழுதும் மிகுந்த நிதானமாகவே உழைத்து வந்துள்ளோம். தேச முன்னேற்றத்திற்கு வேண்டிய துறைகளில் மற்றெல்லா வகுப்பினரையும் போல் நாமும் கருத்துடன் உழைத்தும், உழைத்துக் கொண்டும் வருகிறோம். நாம் செய்ய வேண்டிய வேலை ஒன்றுள்ளது. அதை மட்டும் நான் இங்கு கூறுகிறேன்.

ராஜீய விஷயங்களில் போதுமான கல்வி நமது வகுப்பினர்கள் யாவருக்கும் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். கிராமங்களிலும் நகரங்களிலும் வசிக்கும் எல்லா ஜனங்களும் தங்களுக்குக் கிடைத்திருக்கும் பாத்தியதைகளையும் சுதந்தரங்களையும் ஒரேமாதிரி வகிப்பதும் உபயோகப்படுத்துவதும் இல்லை. பொதுவாக நம்நாட்டில் இன்னும்பெரும்பான்மையோர் தம் சுதந்தரங்கள் இன்னவையென்று நன்கு அறிந்து அவைகளை உபயோகப் படுத்துவதற்கான அறிவு பெறவில்லையென்பது நமது சட்டசபை முதலியசபைகளுக்கு நடக்கும் தேர்தல்களிலிருந்து தெரியவருகின்றது. ஆகவே நம் ஜாதியாருக்கு இவ்வித அறிவும் கல்வியும் புகட்டி அவர்கள் தங்கள் சுதந்தரங்களை நன்கு உபயோகப் படுத்துமாறு அவர்களைத் தூண்டுதல் நமது முதற்கடமையாகும். பிரதிநிதித்வம் என்பது என்னவென்பதையும், அதன் நன்மைகளையும் அவசியத்தையும் விளக்கி, தேர்தல்களில் யோக்கியதை, வன்மை, நற்குணம் முதலியன பொருந்தியவர்களையே நாம் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதையும் போதிக்கலாம். இவ்வறிவு ஏற்படுவதற்கு ராஜீயக் கல்வி அவசியம்.

நம்மில் இன்னும் அநேக பிரசார வேலைகளின் மூலமாய் ஆங்காங்குள்ள நம் சகோதரர்களுக்கு ராஜீயக் கல்வி புகட்டுவதன்றி ஒரு முதல்தரமான தினசரிப் பத்திரிகை ஏற்படுத்தி நடத்துவதாலும் இந்நோக்கம் விருத்தியடையும். மேனாட்டில் ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் தங்கள் அங்கத்தினரை ஒன்று கூட்டும் பொருட்டும், அன்றாடு நடைபெறும் விஷயங்களை அவர்களுக்குத் தெரிவித்தற் பொருட்டும் ராஜயவிஷயங்களில் அவ்வப்போது பயிற்சி அளித்தற் பொருட்டும் தங்கள் தங்கள் பத்திரிகைகளை ஏற்படுத்தி நடத்துகின்றனர். பல துறைகளிலும் முன்னேற்ற மடைந்துள்ள நமக்கு நம்முடைய தென ஒரு தினசரித் தமிழ்ப் பத்திரிகை இல்லாததே ஒரு பெருங்குறையாகும். நம் நலத்தைக் கருதி உழைத்துவரும் இரண்டொரு வாராந்தரப் பத்திரிகைகள் இருப்பது எனக்குத் தெரியும். ஆயினும் அவைகளுக்குப் போதுமான ஆதரவு அளிக்கப்படாததுபற்றி அவைகள் அதிகப் பயன்படுமாறு பிரசாரமாகவில்லை. அவைகளுக்குப் போதுமான சகாயம் புரிந்து கூடுமானால் அவைகளைத் தினசரிகளாக மாற்றுவோமானால் நம் ராஜீய வேலைக்கு அவை மிகவும் உதவி செய்யக்கூடும்.

மிறகு நாம் இன்னும் ஊக்கத்துடன் முன்வந்து ராஜீயத் துறைகளில் புகுந்து நமக்குவேண்டிய சாதனங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று எனக்குத்தோன்றுகின்றது. ஸ்தல ஸ்தாபனங்களிலும் (Local Bodies) சட்டசபைகளிலும் நம்மவர்களில் இன்னும் அநேகர் சென்று நம் பிரதிநிதிகளாயிருந்து நமக்கு வேண்டியநன்மை செய்யலாம். சிற்சில காரணங்களை முன்னிட்டு நம் சுயபலத்தோடு சர்க்கார் உதவியும் தேடவேண்டியவர்களாயிருக்கிறோம். அவ்வுதவியை வேண்டும் சமயங்களிலும் இடங்களிலும் நாம்பெற்று நமது வகுப்பினருக்கென உழைப்போமாக நம் நிலைக்குத் தக்கவாறு சர்க்காரும் தங்களாலியன்ற உதவி நாம் கேட்போமாகில் அளிப்பார்களென்றே நான் நம்புகிறேன்.

முடிவுரை

என் அவகாசத்திற்கும், சக்திக்கும் ஏற்றளவு நீங்கள் எனக்கிட்ட பணியை செய்து முடிக்க நான் முயற்சித்திருக்கிறேன். நம் வகுப்பு சம்பந்தமானதும். நமக்கு முக்கிய மானதுமான பல விஷயங்களைப் பற்றி நான் போதுமான அளவு கவனித்திருப்பதாகக் கூறவில்லை. இடமின்மையாலும், அவகாசமின்மையாலும் என்னால் கவனிக்காது விடப்பட்ட சில விஷயங்களை நீங்களே ஆலோசனை செய்வீர்களென நம்பி நான் விட்டுவிடுகின்றேன். இக்கூட்டத்திற்கு வந்துள்ள ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு நமது வகுப்பு முன்னேற்றத்திற்கு வேண்டிய உதவியைப் புரிய வேண்டுமென்ற கொள்கையை மேற்கொண்டு இச்சட்டத்தின் தீர்மானங்களையும் முடிவுகளையும் நிறைவேறச் செய்தல்வேண்டும். அதுவே நீங்கள் எனக்கியற்றும்மரியாதையாகும். இன்றேல் இக்கூட்டமும் இதன் தீர்மானங்களும் பயனிலவாய் முடியும். ஆகவே நாம் எல்லோரும் ஒத்த மனத்தவர்களாய்நாம் பொறுப்புடன் செய்யவேண்டிய வேலை இன்னதென்று மனதிற்கொண்டு இறைவன் திருவருளையும் நாடி ஊழியம் செய்ய ஆரம்பித்தால் அனைத்தும் இனிதுமுடியும் என்பதற்கு ஐயம் இல்லை. நம் சங்கம் நீடூழி வாழ்க வாழ்க.

பால்டுவின் பிரசங்கம்

—:o:—

வியாபாரச் சங்கங்களுக்கு உபதேசம்

(23-9-27 திராவிடன் தொடர்ச்சி)

முன்பு தாயகத்திலும் அயலகத்திலும், மாறிவந்த நிலைக்குத் தக்கவாறு நம்மை திருத்திக் கொள்ளவேண்டிய பல சந்தர்ப்பங்கள் இருந்தது. நமது மூதாதைகள் பலரும் தங்கள் காலத்தில் சமயத்துக்கேற்றவாறு நடந்துகொண்டதுபோல் நாமும் நடந்து கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறோம். வீரக்கிநிலையையோவேறு எந்த நிலையையோ எடுத்துக்கொள்ளுங்கள் இதை ஆராய்வதினால் நமது தேசத்திற்குத் தகுந்தாற்போல் நாம் பழையநிலையை நோக்கியதால் நமதுவீழ்ச்சியை தடுத்தவர்களானோம். பொதுவேலை நிறுத்தத்தை மீண்டும் நாம்கையாடி இருந்தால்நாம்முயற்சித்ததின் ஜெயமெல்லாம் பாழாகியிருக்கும், அப்படி சம்பவியாதிருந்ததே ஸ்திரமான நிலையைநமக்களித்தது சென்ற சில மாதங்களாக தொழில் விஷயங்களில், எவ்வித இடையூறுகளும் ஏற்படவில்லை என்றறிய நாம் அனைவரும் சந்தோஷ மடைகிறோம்.

வழக்குகளும் இவ்வருஷம் அதிக குறை-வாகியுள்ளது. இவ்விதம் முதலாளிகளும் தொழிலாளிகளும் ஒத்துழைக்க அவசிய மட்டுமென்றி சாதனமும் நிறைந்திருக்கிறது என்று நான் கூறிய போதெல்லாம் அதற்காகவெனம்செய்யப்பட்டிருக்கிறேன் இப்பொழுதுமீண்டும் அதையே பூரண நம்பிக்கையுடன்கூறுகின்றேன் ரயில்வே உத்தியோகங்களிலும் அதன் நன்மைகளிலும் விருத்தி வழி காட்டக்கூடிய ஏற்பாடுகளுக்குரயில் தொழிலாளிகளின் ஒத்துழைப்பை சம்பாதிக்கநமது ரயில்வேக்கள்முதலாக முன்வந்ததுஎனவெளியாவிருப்பதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன் இதுவே திருவாகமும், தொழிலும், சேர்ந்துழைப்பதின் நன்மைக்கு அத்தாக்ஷி இவ்வித போக்குகள் நன்கு பரவவேண்டுவதை நான் எதிர்பார்க்கிறேன்.

தொழிற்சாலைகளில்விரோதப்

பான்மை

தொழிற் சாலைகளில் ஒருவிதவிரோதப் பான்மை இருந்துவருகிறது என்பதை உணரும் போது பிற்காலத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும், அடிக்கடி மனஸ்தாபம் இருந்து வருகிறது என்றதைப்பற்றிசிலருக்குபேசிவருவதிலும் நம்பிவருவதிலும் திருப்தியாயிருக்கிறது நமது நாட்டு தொழிற்சாலைகளின் உண்மையை உணர்ந்த ஒவ்வொருவரும் எங்கும் அப்படி இல்லை என்பதை அறிவார்கள் எப்பொழுதும் ஜனங்களைகிளப்பிவிடுவதையே தொழிலாகக்கொண்டிருக்கும் சிலர் இருந்து வருகிறார்கள்சமாதானத்தின் தத்துவம் உணர்ந்து வருபவர்கள் முன் இப்படிப்பட்டவர்கள் ஜம்பம்பலியாதுநான் திரும்பி வந்ததிலிருந்து சில தொழிற்கக்ஷிப்பத்திரிகைகளை கவனிக்கிறேன் தற்சமயம் அவைகளுள் ஒருவிதமான விரக்தி ஏற்பட்டிருக்கிறது சென்றவருஷ அநுபவம் போன்று இந்த கலக காரணர்கள் சாந்த குருக்களாக மாறிவிட்டால் நமதுதேசத்திற்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை வெகு சீக்கிரத்தில் ஈடுபடுத்திவிடலாம்,

எடின்பரோவில் வரும்வாரம் 59 வது வியாபாரச்சங்க காங்கிரஸ் கூட்டம் பெறபோகிறது அந்தக்கூட்டத்தில் இந்நாட்டின் வியாபாரச் சங்க இயக்கத்தின் யதாவிதியான பிரதிநிதிகள் ஒன்று கூடுவோர்கள்.

பொதுவேலை நிறுத்தத்தில் தற்காலிகமான மேனியா இருந்தது ஒருபுறமிருக்க அதிக தளர்ச்சி யுற்றிருந்த காலங்களிலும் பெரிய சங்கங்களின் தலைவர்கள் பிற்காலத்தை எதிர்பார்த்து நம்பிக்கையுடன் தங்கள்வியாபாரத்தை நடத்திவர முயற்சித்த பொறுமையை நான் முற்றும் உணர்கிறேன். மற்ற சங்கங்கள் நடத்தி கொண்டது போன்று நிலக்கரித் தொழிலாளர் கூட்டமும் சிறிது ராஜதந்திரத்துடனும் சாதுர்யத்துடனும் நடந்துகொண்டிருந்தால் எத்தனையோ நன்மையாக இந்த தேசமும் தொழிலாளர்களும் காப்பாற்றப்பட்டிருக்கலாம்?

தேசச் சொத்தையும் விழுங்கிக்கொண்டு ஏழை மக்களையும் தரித்திரர்களாக்கி பல துற்றுண்டுகளாக கஷ்டப்படுவோரையும் கஷ்டத்திற்குள்ளாக்கி நம்மவரில் பெரும் பான்மையோர் பேராசையைப் பெருக்கி சுகித்துவந்தார்கள், வருகிறார்கள் என்பதை அறிவேன். இதுவே நமது பல வருஷ வீழ்ச்சிக்குக் காரணம்.

தேசத்து வருமானத்தை இதுவரை பலர் அழித்துவந்தது போலல்லாது வளர்த்து இனி ஒருமுறை விருத்தி செய்து சேர்ப்பதற்கு முன்வருவோம் ஒரு மனுஷ்யன் ஒருவீட்டை இடிப்பது சுலபம் கட்டுவது கஷ்டம், பல குழப்பங்களைக் கிளப்பி பலகால நாகரீகத்தையே அழிப்பது சுலபம் ஒரு ராஜதந்திரி யினுடைய வேலை அதுவன்று, மனதாலும், முயற்சியாலும் சிறிது சிறிதாக அநேகாள் சேர்த்து வைத்ததை காப்பாற்றி சேகரித்து வைக்கவும், பலரும் சுகப்படச் செய்யுமே அவன் நிற்கவேண்டும். ஒரு மேலானநன்மைக்காக ஒரு பொதுநன்மைக்காக எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். இதனால் தற்போது நமது பிரிட்டிஷ் தொழிலை சாந்தமாய்வளர்ப்பதைக் காட்டிலும் வேறுமேலானது என்ன இருக்கின்றது.

இதற்கு எஜமானும், ஆட்களும் சமமாக ஈடுபடலாம், கடமையானதும் கோதிப் பானதுமானவார்த்தைகளின்படி நடப்பதேனின் கேடே முடிவாகும்.

அடுத்தவாரக் கூட்டத்தில் கூடும் வியாபாரச் சங்கத் தலைவர்கள்என்னைப் போன்று உணர்ந்து, என்ஜவாப்தாரித்வத்திலும் பங்கெடுத்துக் கொண்டு தங்கள் அதிகாரத்திற்கும் நிலைக்கும் தக்கவாறு நான் சொல்லும் வழியில் எல்லோருக்கும் வழிகாட்ட முன்னிற்பார்களென்று எதிர்பார்க்கிறேன். அப்படி அவர்கள் செய்வார்களாயின் அவர்களைப் பின்பற்றுவோருக்கு புத்துயிரளித்ததாகும். முதலாளிகளும் இதற்கு உடன்பட வேண்டும். இன்று நமது அக்கிய நாட்டு வியாபாரத்தின் நிலையிலும், முறையிலும், தட்டமான மாறுதல்கள் உதித்திருக்கின்றன.

சர்வதேச பொருளாதாரத்திலும் வியாபாரத்திலும் பலமான மாறுதல்கள் தோன்றியுள்ளன. இது நேரவேண்டியதே. இப்படி ஏற்படுவதால் உண்டாகும் கஷ்டத்தை சகல கக்ஷிகளும் தேசங்களும் ஒருவருக்கொருவர் பகைவர்போலன்றி நண்பர்களாகப் பழகுவதால் சாந்தி செய்து கொள்ளலாம்.

(அப்சர்வர்)

தமிழ் நவீன

நாவல்கள்

தமிழ்ப் பெருமக்களே!

நம்முடைய அருமையான தமிழ்மொழி வளர்ச்சி பெறவேண்டுமாயின், நம்மக்களுக்கு அறிவு வரவேண்டுமாயின் நம் நாட்டில்தமிழ் நவீன நாவல்கள் வளர்ச்சிபெறவேண்டும். இப்பொழுது ஆங்கில மொழி வளர்ச்சி பெறுவதற்கு அடிப்படையாய் இருப்பவை நாவல்களேயாகும். ஆகவே தமிழ்மொழி வளரவேண்டும் என்ற எண்ணம் யாருக்கு இருக்கின்றதோ, அவர்கள் தமிழ் நவீன நாவல்களைப் படிக்க வேண்டும். கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் நாவல்கள் படிக்கப்படிக்க இனிப்பாய் இருக்குமாறு சிறந்த செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. ஒருமுறை படித்துப் பார்த்தால் இந்நாவல்களை என்றும் மறக்க முடியாது.

பத்மரேகை	1	4	0
கன்னியின் முத்தம் (முதற்பாகம்)	1	4	0
கன்னியின் முத்தம் (இரண்டாம் பாகம்)	1	4	0
கன்னியின் முத்தம் (மூன்றாம் பாகம்)	1	4	0
கன்னியின் முத்தம் (நான்காம் பாகம்)	1	4	0
ஞானசம்பந்தன்	1	0	0
ஹேமலதா	1	0	0
வீரவன்மன் வெற்றி (முதற் பாகம்)	1	0	0
வீரவன்மன் வெற்றி (இரண்டாம்பாகம்)	1	0	0
மௌனசுந்தரி	1	0	0
லீலா	1	0	0
செல்வராஜன்	0	12	0
மீனாக்ஷிசுந்தரன்	0	12	0
ராமதிலகம்	0	12	0
சுந்தரன்	0	12	0
ஆனந்தசுந்தரி	0	12	0
மங்கையர்க்கரசி	0	12	0
பூபதி	0	12	0
ஆங்கில சிரோமணிகள்	0	10	0
புருஷோத்தமன் சரித்திரம்	0	10	0
பன்னிரு நீதிக்கதைகள்	0	10	0
மாலிகா-பூஷணி	0	10	0
இராமமூர்த்தி	0	10	0
சிவானந்தன்	0	10	0
நீலகண்டன்	0	10	0
இரஞ்சித்சிங்	0	10	0
ஸரஸா	0	10	0
ஏகம் பஞ்சநதம்	0	10	0
சாரதாம்பாள் சரித்திரம்	0	8	0
சுயம் பிரகாசம்	0	8	0
வத்ஸலா	0	8	0
பிரிட்டிஷ் துரைத்தன நற்பயன்	0	6	0
காஞ்சனவல்லி	0	5	0
இராஹிமா	0	5	0
காணாமற்போன கண்மணி	0	5	0
வசந்தசேனை	0	4	0
சின்னத்தம்பி	0	4	0
மாண்டிகிரிஸ்டோ (இரண்டுபாகம்)	3	0	0
போஜ சரித்திரம்	2	8	0
அயாஷா (இரண்டு பாகம்)	1	12	0

இந்திராணி	1	4	0
இரங்கநாயகி	1	4	0
இந்திரஜித்தன்	1	4	0
அரண்மனை இரகசியம்	1	4	0
தஞ்சை நாயகர் தாழ்வு அல்லது விதியின் வலிமை	1	0	0
சிவகுமாரன்	1	0	0
திரிலோக மோகனாங்கி	1	0	0
கோஹர்ஜான்	0	10	0
நீலி வசிகரன்	0	10	0
சீனிவாசன்	0	6	0
கற்புக்கரசி	0	6	0
மோஹனா	0	5	0
பரதன் அல்லது ப்ராத்ரு சிகாமணி	0	12	0
திருமூலர் திருமந்திரம்	2	4	0
பாண்டவ சரித்திரம் அல்லது தருமம ஜயம்	2	4	0
மனுநீதிச் சோழன் (மனுமுறை கண்ட வாசகம்)	0	8	0
முரளிதரன்	0	10	0
விக்ரமசிங்கன் கோட்டை மர்மம் அல்லது கற்பின் வெற்றி	1	0	0
ஷண்முக சுந்தரம் அல்லது காதல் திவ்யம்	2	0	0
தனபாக்கியம் அல்லது அதிர்ஷ்டவதியின் சரித்திரம்	2	0	0
கிருஷ்ணபாய்	1	0	0
பஞ்சரத்தினம்	0	12	0
மரகதவல்லி	0	12	0
ஸர் தாமஸ் மன்ரோ	0	10	0
விரலக்ஷ்மி	0	10	0
புதிய வனத்துக் குழந்தைகள்	0	10	0
இந்து ஸ்திரீ ரத்தினங்கள்	0	8	0
ஆங்கில மாயா விநோதக் கதைகள்	0	6	0
மகா காவிய வசனம்	0	6	0
வீரச் சிறுவர்	0	6	0
பாலர் ராமாயணம் (பாலகாண்டம்)	0	4	6
தாகூர் கதைகள் - I	0	4	0
தாகூர் கதைகள் - II	0	4	0
அசோகர் சரித்திரம்	0	4	0
ஒரு பூனையின் சரித்திரம்	0	4	0

நாற்பது திருடர் கதை	0	4	0
அல்லாவுதீன்	0	4	0
குணமஞ்சரி	0	4	0
மனோன்மணி	0	3	0
சூளாமணி	0	3	3
பல்லவர்கோன்	0	3	0
துஷ்யந்தன் சரித்திரம்	0	2	6
அனசூயா	0	2	6
இரட்டைப்பிள்ளைகள்	0	2	0
டிக் உட்டிங்டன்	0	2	0
மாயத் தாமரை	0	2	0
மாயப் பொம்மை	0	2	0
மூன்று பரதேசிகள்	0	2	0
மூராத்	0	2	0
கடற்கலா வாஸம்	0	2	0
தாளில்லாக் கதவு	0	2	0
நாய்காட்டிய நல்லறிவு	0	2	0
கூடுவிட்டுக் கூடுபாய்தல்	0	2	0
பால நியாயாதிபதி	0	2	0
நான்கு பாடகர்கள்	0	2	0
அன்புள்ள சகோதரி	0	2	0
அதிசயமானகிளி	0	2	0
மூன்று பூதங்கள்	0	2	0
சந்திரஹாஸன்	0	2	0
லவன் அல்லது வீரச்சிறுவன்	0	2	0
திலகவதி	0	2	0
ஜயேசன்	0	2	0
போலிராஜ குமாரன்	0	1	6
கைமன்	0	1	6
ஈனக் ஆர்டன	0	1	6
குருபக்தி	0	1	6
ஆராயும் அங்குட்டன் கதை	0	1	6
மறுபடி முயற்சி செய்	0	1	6
ஜாக்கும் பீன்ஸ்மரமும்-செங்கமலம்	0	1	6
மூன்று காடிகள்	0	1	6
தோட்டக்காரன்	0	1	0
பச்சைத் தேவதை	0	1	0
கார்காலத்துச் சந்திரிகை	0	1	0
ஜடாவல்லவர்	2	8	0
அவ்வை அருந்தமிழ்	0	12	0

மேற்கூறிய புத்தகங்கள் கிடைக்குமிடம்:—

அரோரா அச்சுக்கூடத்து மானேஜர்,

நெம். 34. சின்னத்தம்பி தெரு, சென்னை.

18உ

Printed and Published by S. Kannappar for the S. I. P. Association Ltd., "Justice Printing Works" General Patter's Road, Royapettah, Mount Road, Madras.